# சுதந்திரன்

SUTANTIRAN

தொலைபேசி: 23411 விலை சதம் 25

வள்ளுவர் ஆண்டு 2004, தை 15உ (28—1—73) ஞாயிறு ஜுலைகஜ் 22 | புத்தகம் 26 இதழ் 8


## செய்தியோ செய்தி!

''நானும் இந்த ஊரவன்தான். பக்கத்திலுள்ள சுழிபுரத்தில்தான் பிறந்தேன்!

—வேலணையில் குமாரசூரியர் (வீரகேசரி 17-1-73)

''கேட்டியளே ... நம்மடை குமாரசூரியர் சுழிபுரத்திலை பிறந்தவராம். நான் இவ்வளவு நாளும் அவர் காலியிலைலெயல்லே பிறந்தவரெண்டு நினைச்சநான்.''

—பத்திரிகையில் குமாரசூரியர் பேச்சைப்படித்த ஒருவர்!

# ஆளுங்கட்சிகளுக்குள் குத்து வெட்டு!

## ஐக்கிய முன்னணி உடைவது தவிர்க்க முடியாதது!

### அரசியல் விமர்சகர்கள் கருத்து!

பத்திரிகைச்சபை மசோதாமீது தேசிய பேரவையில் திரு. ஸ்டான்லி திலகரத்தினு அளித்த தீர்ப்பின் எதிரொலியாக ஆளுங் கட்சிகளுக்குள் பலத்த குத்து வெட்டுக்கள் நடைபெற்று வருகின்றன. இக்குத்து வெட்டுக்களை தீர்த்து வைத்து, ஆளுங்கட்சிகளை அமைதிப்படுத்தி மீண்டும் ஒற்றுமையை ஏற்படுத்தும் முயற்சிகள் நடைபெறுவதும் — அவை தற்காலிகமானதாகவே இருக்குமென்றும் — ஏற்பட்ட பிளவு வளர்ந்து காலப்போக்கில் ஐக்கிய முன்னணி அரசு சிதறுப்படுவது தவிர்க்கமுடியாததுஎன்றும் அரசியல் நோக்கர்கள் கருத்து வெளியிடுகின்றனர்.

பத்திரிகை மசோதாமீது தேசிய பேரவையில் எதிர்க் கட்சியினர் எழுப்பிய ஒழுங்குப்பிரச்சினைக்கு சார்பாக சபாநாயகர் தமது தீர்ப்பை அளித்ததும் — நிதியமைச்சர் டாக்டர் என்.எம்.பெரேரா எழுந்து சபாநாயகரின் தீர்ப்பை அரசாங்கம் ஏற்கவில்லையென்றும் தாம் சபாநாயகர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்போவதாகவும் கூறியதும்— அப்பொழுது எதிர்க் கட்சித்தலைவர் ஜே. ஆர். எழுந்து, நம்பிக்கையில்லா பிரேரணை அரசாங்கத்தினுடையதா என்று கேட்டபோது, என். எம். பெரேராவின் முகத்தில் அறைந்தது போல—'இல்லை' என்று பிரதமர் மறுப்பு தெரிவித்ததும் தெரிந்ததே.

இதையடுத்துசபைகலைந்து பிரதமரும், சபாநாயகரும் சென்ற பின்னரும் கூடசபையில் நின்று சமசமாஜிகள் துள்ளியடித்து — பிரதமரையும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி எம்.பி.க்களையும் திட்டிக் கொண்டிருந்தனர்.

சபையில்—வைத்துமூக்குடைபட்ட சமசமாஜத்தலைவர் டாக்டர்.என் எம்.பெரேராவை வைத்துக் கொண்டு சும்மா இருக்கவில்லை. வெளியில் தாம பேசியபலகூட்டங்களில் சபாநாயகர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்போவது நிச்சயம் என என். எம். பெரேரா கூறியதாக நாளேடுகள் செய்திவெளியிட்டுள்ளன. அவற்றை டாக்டர்.என்.எம் இதுவரை மறுக்கவில்லையென்பது குறிப்பிடத்தக்கது!





இதற்கிடையில் பிரதமர் திருமதி சிறிமா தலைமையில் இவ்வாரம் அலரிமாளிகையில், கூடிய சுதந்திரக்கட்சி அமைச்சர்கள் கூட்டத்தில் சபாநாயகரின் கட்டளையை ஏற்பதென்றும், நம்பிக்கையில்லா தீர்மானம் எதையும் கொண்டுவர யாரையும்அனுமதிப்பதில்லையென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது.

(7-ம் பக்கம் பார்க்க)

## புள்ளிகளை நேரடியாக எமக்கு அனுப்புவீர்களா?

### கல்வியமைச்சரிடம் மாணவர்கள் கேள்வி!

திறமையுடிப்படையிலேயே பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை தெரிவு செய்வதாக கல்வியமைச்சர் கூறுகிறார். அப்படியாயின் மாணவர்களுக்கு பரீட்சை முடிவுகளை தரம் பிரித்து அனுப்புவதற்குப் பதிலாக புள்ளிகளையே நேரடியாக வழங்க கல்வியமைச்சர் உத்தரவிடுவாரா?

— இவ்வாறு கேட்கின்றனர் மாணவர்கள்.

''ஐ. மு. அரசு வந்தபின் பல்கலைக்கழகம், பல்கலைக் கழகத் தெரிவுக்கு அழைப்பு விடுப்பதில்லை. அரசு இதில் பூரணமாகத் தலையிடுகின்றது.

''சென்ற முறைகளில் அரசு இன அடிப்படையில் நடந்து தமிழ் மாணவர்களின் எதிர்ப்பையும் வெறுப்பையும் பெற்றது. சென்ற முறைகளில் ஆரம்பத்தில் பல்கலைக்கழக தெரிவு சரியானதேயென்று வாதாடினர் அரசு ஆதரவாளர்கள். பின்னர் கல்வி மந்திரியே பல்கலைக்கழகத் தெரிவு முறையற்றது என்பதை ஏற்றுக்கொண்டார்.

''பின்னர் கிராமப்புற மாணவர்களுக்கு கூடிய சந்தர்ப்பம் வழங்கப்படும் என்றார். பின்பு மாவட்ட அடிப்படையில் என்றார். பிறகு திறமையும் மாவட்ட அடிப்படையும் விகிதத்தில் என்றார். இவ்வாறு அடிக்கடி

(7-ம் பக்கம் பார்க்க)

## கறுப்புக்கொடி ஏற்றியதற்காக திருகோணமலை நகரசபை கலைப்பு!

திருகோணமலை நகரசபை உள்ளூராட்சி அமைச்சரினுல் கலைக்கப்பட்டு அதன் நிர்வாகம் ஓர் சிங்கள ஆணையாளரின் கீழ் கொண்டுவரப் பட்டுள்ளது.

மேற்படி நகர சபை கலைக்கப்பட்டதற்கான காரணங்களில் ஒன்று — குடியரசு எதிர்ப்பு நாளான 1972 மே 22ம் நாளன்று தமிழர் கூட்டணியின் வேண்டுகோள்படி திருகோணமலை நகர சபைக்கட்டிடத்தில் கறுப்பு கொடி ஏற்றியதாகும்.


## தேவை

ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கு இலிகிதராக கடமையாற்றுவதற்கு ஒருவர் தேவை. தமிழ், ஆங்கிலம் தட்டச்சு அறிவு அவசியம். அரசாங்கச் சம்பளம்.

விண்ணப்பிக்க—

வி—101.

மே/பா

சுதந்திரன்,

194 ஏ. பண்டாரநாயக வீதி கொழும்பு-12.


## தமிழ் மாணவர்களின் தொண்டைக்குள் சிங்களம் பாடமொழியாகத் திணிப்பு!

### பௌத்தமதம் கட்டாய பாடமாம்!

சிங்கள வெறியர்களின் ஆட்சியில் தமிழ் மாணவர்களின் தொண்டைக்குள் சிங்களம் போதனு மொழியாகத் திணிப்பு—பௌத்த மதத் திணிப்பு! தமிழ் பாடசாலை சிங்கள பௌத்த பாடசாலையாக மாற்றப்படுகிறது — இத்தனையும் நடப்பது தனித் தமிழ் கிராமமான புத்தூரில்தான்!

தமிழ் மக்களைச் சிங்கள பௌத்தராக்கும் முயற்சியில் அரசு தீவிரமாக இறங்கியுள்ளது. இதற்கு முதற்படியாக தமிழ் மாணவர்களின் தொண்டைக்குள் சிங்களம் பாடமொழியாகவும் பௌத்தம் கட்டாய பாடமாகவும் திணிக்கப்படுகிறது.

முற்றிலும் தமிழ் பிள்ளைகளே படிக்கும் புத்தூரில் உள்ள பௌத்த சிங்களப் பாடசாலையில் சிங்களம் போதனு மொழியாக்கப்பட்டு பூரணமாக அமுல் நடத்தப்பட்டு வருகிறது. பௌத்த மத வழிபாட்டுக்கும் பிள்ளைகள வற்புறுத்தப் பட்டிருக்கின்றனர்.

இப் பாடசாலைக்கு சிங்கள தலைமை ஆசிரியர் நியமிக்கப் பட்டதை அடுத்து பிள்ளை

(7-ம் பக்கம் பார்க்க)

## ஆரியதாசாவுக்கு கறுப்புக்கொடி!

பெப்ரவரி 3ம் திகதி யாழ்ப்பாணம் விஜயம் செய்யவிருக்கும் சுகாதார அமைச்சர் திரு. பீ. ஜி. ஆரியதாசவுக்கு எதிராக கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்த தமிழர் கூட்டணி இளைஞர்கள் தயாராகி வருகின்றனர் என்று அறியப்படுகிறது.


## தேவை

அச்சகமொன்றுக்கு அனுபவமுள்ள மனேஜர் ஒருவர் தேவை. கணக்கு எழுதவும் தெரிந்திருக்க வேண்டும்.

விண்ணப்பிக்கவும்:-

வி—102.

மே/பா.

சுதந்திரன்,

194 ஏ. பண்டாரநாயக வீதி, கொழும்பு-12.


## குறை மந்திரி குமாரசூரியர்!

''குறைகள் இருந்தால்தால் மனிதனுக வாழ முடியும். இதுதான் கடவுளின் நியதி''

—நயினதீவில் குமாரசூரியர் (தினகரன் 17-1-73)

இனிய வாக்காளர்களே!

உங்கள் வீடுகளில் அரிசி இல்லை— மாவு இல்லை— சீனி இல்லை—மிளகாய் இல்லை — என்று துக்கப்படாதீர்கள்! குறைகள் இருந்தால்தான் மனிதனுக வாழ முடியும்! இத்தட்டுப் பாடுகள் — குறைகள் எல்லாம் கடவுளின் நியதிகள்!

தெய்விக வல்லமை படைத்த குமாரசூரியர் கூறுவதை நம்புங்கள்!

அவருடைய பொன்மொழியைச் சாப்பிடுங்கள்— அதுபோதும் பசிக்காது!

— கவரிமான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களின் உரிமைக்குரல்

## தமிழாராய்ச்சிக்கழகத்தின் இலங்கைக் கிளை

# அரசின் கைப்பொம்மையா?

## தமிழுக்கு உரிமை மறுக்கும் ஆட்சியின் தலைவியா மாநாட்டை திறப்பது?

## தமிழகத் தலைவர்களை அழைப்பதற்கும் சின்னத்தனமா? செல்வாவுக்கு ஏன் அழைப்பில்லை?

இலங்கையில் நடைபெறவிருக்கும் தமிழாராய்ச்சி மாநாடு பற்றியு'', தமிழாராய்ச்சிக் கழகத்தின் போக்குக் குறித்தும், இரு வாசகர்கள் தங்கள் கருத்துக்களை தெரிவித்துள்ளனர். மேலும் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன —ஆ-ர்.

## சுதந்திரன் கருத்தரங்கம்

14-1-73 வீரகேசரியின் முதல் பக்கத்தில் 1974 ஜன. 3ம் தேதி தமிழாராய்ச்சி மகாநாடு யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகும் என்ற செய்தியை படித்ததும் மிகவும் சந்தோஷப்பட்டேன். ஆனால் அதே நேரத்தில் அடுத்த செய்தியை படித்ததும் அதாவது பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயகாவும், ஜனாதிபதியும் மகாநாட்டை ஆரம்பித்துவைப்பார்கள் என்ற செய்தியை படித்ததும் அதிர்ச்சிஅடைந்தேன். கவலைப்பட்டேன். கண்ணீர் விட்டேன்.

எங்கள் தங்கத் தமிழுக்கு அரசியல் அமைப்பு சட்டத்தில் உரிய இடத்தை —பாதுகாப்பை கொடுக்காமல்— இருக்கும் இந்த அரசை பிரதிநிதித்துவப்படுத்தும் இவ்விருவரையும் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டை ஆரம்பித்து வைக்க கேட்கும் விழா குழுவினருக்கு என்ன துணிவு வேண்டும்? இவர்களுக்கு கொஞ்சமேனும் மானம்-ரோசம்-வெட்கம் இல்லையா? இவர்கள் தமிழர்களா? அல்லது டமிழர்களா? தாய் பிச்சை எடுக்க மகன் காசியில் அன்னதானம் வழங்கின கதையாகத்தான் இருக்கிறது தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டின் விழா குழுவினரின் செயல்.

பெரிய அறிவாளிகள்—மேதாவிகள் என்றெல்லாம் இந்த விழா குழுவினர் பெயர் எடுத்து இருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய சில செயல்களை பார்க்கும் பொழுது குழந்தைத்தனமானதாகவும் — முட்டாள் தனமானதாகவும் — சந்தி சிரிக்கும்படியும் இருக்கிறது. ஏன்தான் இவர்கள் படித்து மேதாவிகளாகவும் — அறிவாளிகளாகவும் வந்தார்களோ தெரியாது. இவர்களை இனி அந்த ஆண்டவன் தான் காப்பாற்றவேண்டும். நல்லபுத்தி கொடுக்கவேண்டும்.

அடுத்து இது ஒரு அரசியல் கலப்பற்ற மகாநாடென்றும் விழா குழுவினர் பெருமையோடு பேசிக்கொள்கிறார்கள். யாரை ஏமாற்ற பார்க்கிறார்கள் இவர்கள்? அந்த மகாநாட்டை பிரதமரும், ஜனாதிபதியும் ஆரம்பித்து வைப்பார்கள் என்று எப்பொழுது செய்தி வந்ததோ அன்றே இந்த தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டில் அரசியலும் கலந்துவிட்டது. இதை யாரேனும் மறுக்க முடியுமா?

தமிழ்மொழியைப் பற்றி பேசுவதற்கு எழுதுவதற்கு-ஆராய்ச்சி செய்வதற்கு—மேதைகளுக்கும்—அறிவாளிகளுக்கும்— புலவர்களுக்கும் —பண்டிதர்களுக்கு ம தான் உரிமை உண்டு — சொந்தம் உண்டு என்ற கருத்து எந்தக் காலத்திலும் ஏற்கமுடியாது. உண்மையில் இவர்கள் எல்லாம் உடல் என்றால்—தமிழின் மூச்சு—உயிர் எல்லாம் இந்த ஏழை—விவசாய—பாட்டாளி தமிழர்கள்தான். ஆகவே இவர்களை அடியோடு புறக்கணிக்காமல்—இவர்களும்கண்டு—கேட்டு— இன்புறச்செய்யும்படி நிகழ்ச்சிகள் அமைந்து இருக்கவேண்டும்.

மேலும் இந்த மகாநாட்டை கூடியவரை சிக்கனமாக நடத்தவேண்டும். ஏனெனில் இன்றைய நாட்டின் நிலை வர, வர மோசமாகிக் கொண்டு வருகிறது. அதுவும் தமிழர்களைப் பொறுத்த அளவில் எல்லாம் இங்கு தலைகீழாகத்தான் இருக்கிறது. ஆகவே கூடியவரை இந்த மகாநாட்டை சிக்கனமாக நடத்திமுடிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக நான்சொல்லவிரும்புவது என்னவெனில் தமிழர்களுடைய ஒத்துழைப்பு, ஆதரவு இந்த தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டுக்கு வேண்டுமெனில் என்னுடைய இந்த கருத்துக்களை செயல்படுத்தும் முறையில் தான் இருக்கிறது என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

வி. ஆர். லிங்கம்,
இணுவில்.

தமிழாராய்ச்சி மாநாட்டு இணைச்செயலாளர்களில் ஒருவரான கலாநிதி ஆனந்தராஜன் கூறிய கருத்துக்கள் 15ம் திகதி தினகரன் பத்திரிகையில் வெளியாகியுள்ளது. அதாவது தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு பிரதமர் இந்நாட்டின் முதல்வர் என்ற முறையில் அழைக்கப்படுவார். இம்மாநாடு அரசியல் கலப்பற்ற மாநாடு. மாநாட்டில் பேசுவோர் அரசியல் பேசினால் வெளியேற்றப்படுவர். கருணாநிதிகூட அழைக்கப்படுதற்கு நிபந்தனை விதிக்கப்படும்.''

இவைகளை கருத்தில் கொள்ளும்போது எந்த ஒரு உணர்ச்சியுள்ள தமிழ்மகனும் வேதனையடையாமல் இருக்கமுடியாது. நமது நாட்டு பிரதமர் தலைமையிலான அரசாங்கம், இங்குள்ள தமிழனின் அற்ப சொற்ப எஞ்சிய உரிமைகளையும் பறித்த அரசாங்கம். எந்த ஒரு துறையிலும் தமிழனை முன்னேறாமல் செய்யும் நோக்கத்துடன் பல திட்டங்களைத் தீட்டி தமிழினத்துக்கு குழிபறிக்கின்ற அரசாங்கம், குறிப்பாக கல்வித்துறையில் தமிழ் மாணவனை உயிருடன் வதைக்கும் அரசாங்கம். எல்லாவற்றுக்கும் மேலாக தமிழன்னையை உனக்கு அரியாசனத்தில் அமர தகுதியில்லையென்று கூறிய அரசாங்கம். இந்த அரசாங்கத்தின் தலைவியை தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக்கு தலைமை தாங்க அழைக்கிறார்கள். இதைப் பார்க்கும்போது தமிழாராய்ச்சி கழகத்துள் துரோகிகள் ஊடுருவல் நடத்தியிருக்கிறார்களோவென ஐயுறவேண்டியுள்ளது.

மிகுந்த தமிழ் உணர்ச்சியுடன் எங்கு தமிழுக்கு அநீதி இழைக்கப்படுகின்றதோ அங்கே சீறி எழவேண்டிய கழகம் இப்படி இழிசெயலை செய்ய எண்ணியுள்ளது என்பதை எண்ண மிகுந்த வேதனையடைய வேண்டியுள்ளது. இந்நாட்டின் முதல்வர் என்ற முறையில் பிரதமர் சிறிமாவோ அழைக்கப்படலாமென்றால், தமிழுக்காக அதன் வளர்ச்சிக்காக இயங்கிவரும் கழகம், இந்த முதுமைப் பருவத்திலும் அயராது தமிழ் தொண்டு செய்யும் தமிழர்களின் முதல்வர் தந்தை செல்வாவுக்கு அல்லவா முதலில் அழைப்புஅனுப்பவேண்டும். நிலைமையில் மாற்றம் இல்லாவிடின் தந்தை செல்வாகூட அரசியல்வாதி என்றமுறையில் மாநாட்டில் புறக்கணிக்கப்படுவது திண்ணம். கலைஞர் கருணாநிதி வருகை, மற்றும் தமிழ் நாட்டு பிரமுகர்களின் வருகைக்குகூட ஐயப்பாடு தெரிவிக்கிறார் இந்த டாக்டர் ஆனந்தராஜன்.

குறிப்பாக சொல்லப்போனால் தமிழாராய்ச்சி மாநாட்டிலாயினும் கருணாநிதி போன்ற அரசியல்வாதிகளையும் சிவாஜி கணேசன் எம். ஜி. ஆர். போன்ற கலைஞர்களையும் பார்க்க அவர்கள் பேச்சை கேட்க தமிழ் மக்கள் ஆவலாய் இருக்கிறார்கள். இதற்கு சிலர் தடைவிதித்தால் இவற்றின் பலாபலனை அந்த சிலரே அனுபவிக்க வேண்டிவரும்.

பேச்சாளர்கள் பேசும்போது சில நிபந்தனைகளுடன்தான்பேச அனுமதிக்கப்படுவார்கள் எனக் கூறுகிறார் இந்த ஆனந்தராஜன். இவரிடம் ஓர் ஐயப்பாட்டைதெரிவிக்கலாம். நிபந்தனைகள் என்றால், இங்குள்ள தமிழர்கள் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள். அடக்கி ஒடுக்கப்படுகிறார்கள். தமிழுக்கு உரிமையில்லை. இவை போன்ற பேச்சுக்கள் தானா? இங்குள்ள தமிழர்கட்கு உரிமை மறுக்கப்பட்டுள்ளது! யாரும் மறுக்க முடியாதது. அரசாங்கம்தான் இதை மறுக்கிறது. அப்படியாயின் தமிழாராய்ச்சிக் கழகம் அரசாங்கத்தின் [illegible] இயங்குகிறது! அதுவும் மதிப்புக்குரிய தனிநாயக அடிகள் தலைமையில்?

அரசாங்கத்தின் சிறு பண உதவிக்கு ஆக அரசாங்கத்துக்கு கழகம் பந்தம் பிடிக்கிறதா? அப்படியாயின் அந்தொகையை நாம் தண்டிச் சேர்த்து கொடுப்போம்!

சிவசிதம்பரம் எப்படி உள்ளே வந்தாரோ தெரியவில்லை. அரசியல் கலந்தால் அவர் வெளியேற்றப்படுவார் என்கிறார் ஆனந்தராஜன். எல்லாம் சரி இந்த ஆனந்தராஜன் என்பவர் யார்? தமிழ் மக்கள் முன் பின்னறியாத இந்த மனிதரை கழக இணைச் செயலாளராக்கியது யார்? சுதந்திரக்கட்சியின் பந்தமா? இவர் பேசுவது போன்ற அகம்பாவ பேச்சுக்கள் இறுதியில் இவரை வருந்தவைக்கும்.

இறுதியில் ஓர் வேண்டுகோள்.

தமிழர் கூட்டணிக்கு:-பிரதமரை இதில் கலந்துகொள்ளச் செய்தால் நாம் இங்கு தமிழருக்கு ஒன்றும் பாதகமாக செய்யவில்லை. உரிமை கொடுக்கிறோம் என்று பொய்ச்செய்தியை உலகத்துக்கு அறியவைக்க பிரதமர் முயலுவார். இதைத்தடுக்கவேண்டியது உங்கள் கடமை.

கழகத்துக்கு:- உங்கள் போக்கை மாற்றுங்கள். இல்லையேல் அண்மையில் நாவலர் விழாவில் நடைபெற்ற மனவருத்தத்துக்கு உரிய செயல்கள் நடைபெறும். அமைதியின்மை ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

வாழ்க தமிழ்.

வெல்க தமிழினம்.

—தாவடியூரான்.
தாவடி வடக்கு,
கொக்குவில்.

## குறை மந்திரி குமார சூரியர்

''குறைகள்இருந்தால் தான மனிதனுக வாழ முடியும்—இதுதான் கடவுளின் நியதி''

—நயினாதீவில் குமார சூரியர்.

(தினகரன் 17.1.73)

இனிய நண்பர்களே!

குமார சூரியரிடம் இனிமேல் குறைகள் கண்டுபிடிக்க முயலாதீர்கள்!

ஏனென்றால்......

அவர் மனிதனுகவாழ ஆசைபபடும் மனிதர்!

குறைகளோடு தான் வாழ்வார்!

அதுதான் அவர் வாழ்வு!

அவரே ஒப்புக் கொண்ட அவருக்கேயுரிய தத்துவம் அது!

—— கவரிமான்

## தொழிற்சங்கம் அங்குரார்ப்பணம் — ஆரம்பித்தனர்

வட இலங்கை கள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவு ஊழியர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. வடமாகாணத்தில் இயங்கும் 29 சங்கங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் பிரசன்னமாக இருந்தனர். கூட்டுறவு ஊழியர்களைப் பாதிக்கும் பல்வேறு தரப்பட்ட பிரச்சினைகள் ஆராயப்பட்டன.

''900க்கு மேற்பட்ட சிறுபான்மைத் தமிழ் வாலிபர்கள் ஒன்றுபட்டு ஒரு சங்கமாக இயங்குவது மிகவும் பெருமைப்படத்தக்கதும்; முக்கியமானதென்றும்; இலங்கைத் தமிழர்களின் சரித்திரத்திலேயே பொறிக்கப்படவேண்டிய ஒரு விஷயம்'' என்று சங்கத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசிய சமாஜ உபதலைவர் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் இப்பெரிய பலம் பொருந்திய இத்தொழிற் சங்கத்தை முறியடிக்க முயலுபவர்கள் முதலாளிகளாக இருந்தாலென்ன; அதிகாரிகளாக இருந்தாலென்ன அவர்களுக்கு தகுந்த பாடம் கற்பிக்கவேண்டும் என்றும் கூறினார்.

சங்க நிர்வாகிகள் தெரிவின் போது திரு. கே. மாணிக்கம் அவர்கள் தலைவராகவும்; திரு. எம். கே. ஜீவகதாஸ் அவர்கள் பொதுக்காரியதரிசியாகவும்; திரு. எஸ். திவ்வியமணி பொருளாளராகவும் சபையோரினால் ஏகமனதாகத்தெரிவு செய்யப்பட்டனர்.

## மணிபல்லவ மறவர் மன்றம்

ஊர்காவற்றுறைத் தொகுதியைச் சேர்ந்த கரம்பொனில் அண்மையில் 'மணிபல்லவ மறவர் மன்றம்' எனும் பெயரில் ஓர் மன்றம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. மன்றத்தின் நிர்வாகிகளாக பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்.' டாக்டர் லேயோன் பிள்ளை, உப தலைவர் திரு. ம. இரத்தினம், செயலாளர் யோ. திருச்செல்வம், துணைச்செயலாளர் — எம். ஏ. பவுலீஸ், பொருளாளர் க. அகஸ்ரின். ஏழுபேர் கொண்ட செயற்குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

கூட்டத்தில் காவலூர்க் கவிஞர் ஞா. ம. செல்வராசா, இரத்தினம் சிறிராசா, ம. அருளப்பு ஆகியோர் உரையாற்றினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல் மேடை

அன்பு நண்பா,

மரம் பழுத்திடும் போது வெளவால்கள் அதைச்சுற்றி வட்டமிடும்; பழக்காலம் முடிந்ததும் மரத்தைப்பற்றி அக்கறையின்றி அங்கிருந்து அவை பறந்து சென்றுவிடும். இதைத்தான் நம்முடைய ஒளவை மூதாட்டி கூட 'மரம்பழுத்தால் வெளவாலை வாவென்று கூவி இரந்தழைப்பார் யாவருமிங்கில்லை' என்று அழகாகக் கூறியிருக்கிறார்!

இது சாதாரணமான தெரிந்த நிகழ்ச்சிதானே ... இதை இப்போது நீ எடுத்துரைத்திடக்காரணம் என்ன என்று உன் உள்ளம் என்னைக்கேட்டிடும்! இல்லை நண்பா, அண்மையில் காங்கேசன் துறைத்தொகுதியில் சில அரசியல் வெளவால்கள் சுற்றிப்பறந்ததைக் கண்ட போது எனக்கு ஒளவையின் பாடலே நினைவுக்கு வந்திட்டது!

காங்கேசன்துறைத்தொகுதி — இடைத்தேர்தல் நடைபெற வேண்டிய பருவ காலத்தை எதிர்நோக்கி நிற்கிறது. காங்கேசன் துறை வாக்காளர்களின் கைகளில் வாக்குகள் என்ற பழம் பழுத்து காட்சியளிக்கின்றன. இந்தப்பழத்தை குறி வைத்து — கம்யூனிஸ்ட் வெளவால்கள் அண்மையில் காங்கேசன் துறைத் தொகுதியில் வட்டமிட்டிருக்கின்றன!

நண்பா, கம்யூனிஸ்டுகளை வெளவால் என்று அழைப்பது மற்றொரு வகையிலும் பொருத்தமானதுதான்! வெளவால் பறவையா, மிருகமா என்பது இதுவரை முடிவு காணப்படாத பிரச்சினை! அது பறவையாகவும் தெரியும்—மிருகம் என்று வாதிடவும் ஆதாரம் உண்டு. அதே போலவேதான் கம்யூனிஸ்டுகளும் தென்னிலங்கையில் சிங்களவர் மத்தியில் பேசுவது ஒன்று—வடக்கே தமிழர்கள் மத்தியில் பேசுவது மற்றொன்று!

# கம்யூனிஸ்டுகளின் புதிய கரடி! தமிழரை ஏமாற்றப் புதியபுரளி!!

விருத்தி வேலைகளை ஆட்சிபீடமேறியதும் அப்படியே நிறுத்தி வைத்த அரசு! அந்த அரசின் பிரதிநிதிகளுக்குத்தான் — அதாவது கம்யூனிஸ்ட்டுகளுக்குத்தான் — அபிவிருத்திச் சபையில் பாராட்டு! காங்கேசன்துறை அபிவிருத்தி வேலைகளை கைவிடக்காலாகஇருந்தவர்களுக்கு காங்கேசன்துறை அபிவிருத்தி சபை பாராட்டு! நல்ல வேடிக்கை இது — இல்லையா?

திருவாளர் வி. பொன்னம்பலத்துக்கு பாராட்டாம் — அவர் எதனைச் சாதித்து முடித்ததற்கோ இந்தப் பாராட்டு என்று என்னைக் கேட்காதே! அவர் மாஸ்கோ சென்று திரும்பியதற்குத்தானும் இந்தப் பாராட்டு! இந்த நாட்டிலுள்ள ஏழைகள் எல்லாம் செருப்புப் போடக்கூடிய நிலைவரும் வரையும் தாம் செருப்பு அணியப்போவதில்லை என்று முன்னொருகால் கூறியவராம் இந்த வீ. பி. — இவர் இந்நாட்டிலிருக்கும் ஏழைகள் அனைவரும் நோய் வந்திடின் மாஸ்கோவுக்கு சென்று மருந்து வாங்கும் நிலைவரும் வரை நானும் இலங்கையைவிட்டு, நோய்க்கு வைத்தியம் செய்யமாஸ்கோ செல்ல மாட்டேன் என்றுகூறியல்லவா இருக்க வேண்டும் என்பாய்! குறும்புக்காரன் அல்லவா நீ! கம்யூனிஸ்டுகள் நோய்க்கு மட்டுமா வைத்தியம் செய்ய மாஸ்கோ செல்கிறார்கள்; மூளைக்கும் அரசியல் வைத்தியம் செய்ய வல்லவா அந்தப் 'புண்ணிய' பூமிக்கு சென்று திரும்புகிறார்கள்!

அது எப்படியோ போகட்டும்—வீ. பிக்குப் பாராட்டு விழா என்ற போர்வையில் 'இடைத்தேர்தல் வேட்பாளர் அறிமுக' விழா தான் அங்கு நடைபெற்றிருக்கிறது! ஆமாம்— தமிழினத்தின் மரணசாசனமான புதிய அரசியல் சட்டத்தை ஆதரித்து—அரசாங்கக்கட்சிகளின் சார்பில் திருவாளர் வீ. பொன்னம்பலம்தான் அங்கு போட்டியிடப்போவதாக மறைமுகமாக அந்த மேடையில் குறிப்பிடப்பட்டதாம் — இதை 11-1-73 ஈழநாடு கூறுகிறது!

ஆட்சி உரிமையையும் நிலைநாட்டப்பட்டுள்ளது''

என்றும் பேசியிருக்கின்றார் ரத்கம எம். பி! இதைத்தானே ஈழத்திலும் தமிழ்த்தேசிய இனம் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக கோரி நிற்கின்றது. சிங்கள வகுப்பு வெறியர்களுடன் சேர்ந்துகொண்டு, தமிழ்த் தேசிய இனத்தின் சுயாட்சிக் கோரிக்கையை காலின் கீழ் போட்டு மிதிக்கின்ற கம்யூனிஸ்டுகள், ரஷியாவைப்பற்றி பேசி யாரை ஏமாற்ற முனைகிறார்கள்?

இலங்கைத் தமிழர்களுக்கு சமஷ்டி ஆட்சி ஒருபோதும் கொடுக்கவே மாட்டோம் என்று இந்தியா சென்றிருந்த போது — திமுகவுடன் பேசியவர் இதே கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த வீ. பொன்னம்பலத்தின் குருவான தோழர் பீட்டர் கெனமன்தான் என்பதை தமிழ் மக்கள் அதற்குள் மறந்துவிடுவார்களா?

''தமிழ் மக்களின் பாரம்பரியத் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழே நிர்வாக மொழியாக இருக்க வேண்டும் என்பதும், தமிழ்மொழி செழித்துவளர அனுமதிக்கப்பட வேண்டும் — பாதுகாக்கப்படவேண்டும் என்பதுமே கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை'' — என்று கம்யூனிஸ்ட் தலைவர் டாக்டர் விக்கிரமசிங்க அழுத்தமாக இக்கூட்டத்தில் தெரிவித்திருக்கிறார்! நல்லது — மெத்த மகிழ்ச்சி!

தமிழ் மக்கள் மீதும், அவர்களது உரிமைகள்மீதும் திடீர் அக்கறை காட்டும் இந்தக் கம்யூனிஸ்டுகள் இதுவரை என்ன செய்தார்கள்? எப்படி நடந்து கொண்டார்கள்?

1966ம் ஆண்டு சனவரி 8ம் நாள் — தமிழ் மொழிச் சட்டவிதிகளுக்கு எதிராக — வகுப்புவாத வேலைநிறுத்தத்தை முடுக்கி விட்டவர்கள் — தமிழ் மக்களுக்கு எதிராக

# அடிப்படை உரிமைகள் வழங்கப்படவில்லையாம்! ஐயோ பாவம்! இன்றுதான் வந்ததோ ஞானோதயம்!

வடக்கே தமிழ் மக்கள் மத்தியிலே நின்று தமிழுரிமைக்காக முழங்கித்தள்ளுவார்கள் — அந்த முழக்கம் தங்கள் கட்சியின் ஆங்கில, சிங்கள ஏடுகளில் வாராமல் பார்த்தும் கொள்ளுவார்கள்! ஆம் தமிழ் மக்களை ஏமாற்ற அங்கொரு வேடம்! சிங்கள மக்களுக்கு அஞ்சி இங்கொரு வேடம்! இவர்கள் தாம் கம்யூனிஸ்ட் வெளவால்கள்!

தமிழ் மக்களையும் தமிழ்மொழியையும் அடிமைப்படுத்தி அழித்தொழிக்கும் மரண சாசனமான புதிய அரசியல் சாசனத்தைத் தயாரிப்பதில் பூரணபங்கு கொண்டு — புதிய அரசியல் சட்டத்துக்காக வக்காலத்து வாங்கி வந்த கம்யூனிஸ்டுகள், தமிழ் மக்களிடையே புதிய அரசியல் சட்டத்துக்கு எதிராக எழுந்த தேசிய எழுச்சியை எதிர்கொள்ள முடியாமல் எங்கோ ஓடி ஒளிந்திருந்து விட்டு, இப்போது காங்கேசன் துறையில் மீண்டும் முகம் காட்டத் துணிந்திருக்கிறார்கள்!

அரசியல் சட்டத்துக்கு தமிழ் மக்கள் காட்டி வரும் எதிர்ப்பு தணிந்து விட்டது என்று கம்யூனிஸ்டுகள் கருதுவார்களானால், அவர்கள் தப்புக்கணக்குப் போடுகிறார்கள் என்பதுதான் பொருள்! காங்கேசன் துறை இடைத்தேர்தலுக்கு தந்தைசெல்வா சந்தர்ப்பம் அளித்ததே புதிய அரசியல் சட்டத்துக்கு தமிழ் மக்களின் எதிர்ப்பை எடுத்துக்காட்டுவதற்குத்தான்! காங்கேசன் துறையில் நடைபெறவிருக்கும் இடைத்தேர்தல் —புதிய அரசியல் சட்டத்தை தமிழ் மக்கள் ஏற்கிறார்களா—நிராகரிக்கிறார்களா என்பதற்கு விடைகாணுகின்ற ஒரு கொள்கைப்போராட்டமாகவேயிருந்திடப் போகிறது!

மாஸ்கோ சென்று திரும்பிய வீ. பொன்னம்பலம் அவர்களுக்கு பாராட்டு விழா என்ற போர்வையில் கம்யூனிஸ்ட் வெளவால்கள் மல்லாகத்தில் நின்று வாய்ச்சவடால் அடித்துத் தள்ளியிருக்கின்றன! காங்கேசன் துறை அபிவிருத்தி சபையின் மூன்றாவது ஆண்டு விழாவில்!!

நடைபெற்றது காங்கேசன்துறை அபிவிருத்தி சபையின் மூன்றாவது ஆண்டுவிழா! அதில் பேச்சாளர்களாக அழைக்கப்பட்டிருந்தவர்கள் — பாராட்டுப்பெற அழைக்கப்பட்டிருந்தவர்கள் அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த கம்யூனிஸ்டுகள். எத்தகைய அரசு தெரியுமா? காங்கேசன்துறை துறைமுக அபி

இந்தக் கூட்டத்தில் பேசிய கம்யூனிஸ்ட் தலைவர்கள் எல்லோரும், தமிழ்மக்களுக்காக — தமிழுரிமைக்காக — வடித்திருக்கிறார்கள் குடம் குடமாக — நீலிக்கண்ணீர்! இடைத்தேர்தலை மனதில் கொண்டு அரசியல் நாடகம் ஆடியிருக்கிறார்கள் மல்லாகத்தில்!

''வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் வழங்கப்படாமல் சிங்கள — தமிழர் ஐக்கியம் பற்றிப் பேசுவதில் பயனில்லை. தமிழரின் அடிப்படை உரிமைகள் வழங்கப்பட்டபின்புதான் இரு இனத்தவர். மத்தியிலும் ஐக்கியம் ஏற்படும்! சிறுபான்மையோர் பிரச்சினை தீர்க்கப்படாமல் பொருளாதாரத்தை வளர்க்கவும் முடியாது''!

என்று பேசியிருக்கிறார் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ரத்கம பா. உ. எம். ஜி. மெண்டிஸ்!

இதைத்தானே, தமிழரசுக்கட்சியும், தமிழர் கூட்டணியும் தொடக்கத்திலிருந்தே திரும்பத்திரும்பக் கூறிவருகிறது — தமிழர் கூட்டணி இதைக்கூறும்போது 'வகுப்புவாதம்' பேசுவதாக குற்றம் சுமத்தி வந்த கம்யூனிஸ்டுகள் இப்போது, அதையே தாமும் திருப்பிக் கூறுவது உண்மையில் அந்தரங்கசுத்தியுடனேயா? அல்லது தேர்தல் கண்துடைப்பு நாடகமா?

புதிய அரசியல் திட்டம் தமிழ் மக்களுக்கு எல்லா உரிமைகளையும் அளித்துவிட்டதாக கம்யூனிஸ்ட் கட்சியுட்பட ஆளுங்கட்சியினர் கூறிவந்தார்கள் —தமிழர் கூட்டணியினராகிய நாமோ இருந்த உரிமைகளையும் பறித்து தமிழ் மக்களை புதிய அரசியல் சட்டம் அடிமைப்படுத்திவிட்டதென்றோம் — நாம் இனக் குரோதத்தை கிளப்புவதாக நம்மீது குற்றம் சுமத்தினார்கள் — இப்போது புதிய அரசியல் திட்டத்தில் தமிழர்களின் அடிப்படை உரிமைகள் வழங்கப்படவில்லையென்கின்ற நமது கருத்தை அவர்களே ஒப்புக்கொண்டு பேசியிருக்கிறார்கள்!

''சோவியத் நாட்டில், சகல தேசிய இனமக்களுக்கும் நிர்வாகம், கலாசாரம் ஆகிய உரிமைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அதுமாத்திரமன்றி ஒரு இனம் வாழும் பிரதேசத்தில் அது தன்னைத்தானே ஆளும் சுய

சிங்கள சுதந்திரக் கட்சியுடன் சேர்ந்து 'தோசை வடை'' கோஷம் எழுப்பியவர்கள் — தமிழ் மொழிச் சட்டத்துக்கு எதிராக ஊர்வலம் நடத்தியவர்கள் இதே கம்யூனிஸ்டுகளல்லவா? அப்போது எங்கே போயிற்று இந்தத் தமிழ்ப் பற்றும் பாசமும்!

1970ம் ஆண்டு ஐக்கிய முன்னணி அரசாங்கம் அமைத்த போதும், தமிழர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல்தானே இருந்தன! அப்போது தமிழர்களின் அடிப்படை உரிமைகளை வழங்க வேண்டும் என்று நிபந்தனை விதித்து கம்யூனிஸ்ட் கட்சி அரசாங்கத்தில் சேர்ந்ததா? கிடையாது! தனிச் சிங்களக் கொள்கையை அப்படியே ஏற்று சுதந்திரக்கட்சியுடன் ஐக்கியமாகியது! தமிழை வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நிர்வாக மொழியாக்குவதை செய்யும் 1966ம் ஆண்டின் தமிழ் மொழிச் சட்ட விதிகளை நடைமுறைப் படுத்துவதில்லை யென்ற ஐக்கிய முன்னணி அரசின் கொள்கையை அப்படியே ஏற்றுக்கொண்டார்கள்!

ஐக்கிய முன்னணி அரசு பதவிக்கு வந்த பின் நாடாளுமன்றத்திலும், பின்னர் தேசிய பேரவையிலும் கம்யூனிஸ்ட் கட்சியினர் யாராவது எப்போதாவது தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்திப் பேசியிருக்கிறார்களா? கிடையவே கிடையாது! ஹன்சார்ட் புத்தகத்தை புரட்டிப் புரட்டித் தேடினாலும் காணமுடியாது!

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் ஆட்சி மொழியாக வேண்டும்; தமிழே தமிழ் பிள்ளைகளின் போதனா மொழியாக வேண்டும் — தமிழே தமிழ்ப் பகுதி நீதிமன்றங்களின் மொழியாக வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் தமிழரசுக்கட்சி பலதடவைகளில் தீர்மானங்கள் — திருத்தங்கள் கொண்டு வந்த போதெல்லாம், அவற்றை ஆதரிக்காதது மட்டுமல்ல — எதிர்த்து வாக்களித்தவர்கள்தாம் இந்தக் கம்யூனிஸ்டுகள்!

இவைதாம் போகட்டும் — புதிய அரசியல் சட்டத்தை உருவாக்குவதற்காக கூட்டப்பட்டதே அரசியல் நிர்ணய சபை — அந்

(9-ம் பக்கம் பார்க்க)

# தமிழுரிமைகோரும் திருத்தங்களை எதிர்த்தது ஏன்? ஏன்? தமிழரை அடிமையாக்கும் சட்டத்தை ஆதரிப்பதுஏன்?ஏன்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## ஆமைவேகம் ஏன்?

தமிழர் கூட்டணி என்ன செய்கிறது?

தமிழர் கூட்டணியிடம் இந்நாட்டுத் தமிழ் மக்கள் குறிப்பாக தமிழ் இளைஞர்கள் எதிர்பார்க்கின்ற அளவுக்கு வேகமும் சுறுசுறுப்பும் நடவடிக்கைகளும் போதிய அளவில் காணப்படாததேன்?

பொதுக்கூட்டங்களை நடத்தி விடுவதாலும், மேடைகளில் நின்று உணர்ச்சி பொங்க உரையாற்றி விடுவதாலும் ஓர் இனத்தின் சுதந்திரத்தை நிலை நாட்டி விடலாமென்று எவராவது எதிர்பார்க்க முடியுமா?

மேடைகளில் நின்று தமிழ் மக்களின் அரசியல் விழிப்புணர்வையும், விடுதலை வேட்கையையும் தூண்டி விடும் அளவுக்கு, அந்த உணர்ச்சியை செயல்படுத்தக் கூடிய திட்டங்களை முன்வைத்து, இயக்கங்களை உருவாக்கி நடத்திச் செல்வதில் தமிழர் கூட்டணியினர் போதிய வேகம் காட்டாததேன்?

இவ்வாறான கேள்விகளை துடிப்பும், விடுதலை எழுச்சியும் மிக்க தமிழ் மக்கள்—குறிப்பாக இளைஞர்கள் தமிழர் கூட்டணித் தலைவர்களை நோக்கி இன்று கேட்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

இவ்வாறான கேள்விகள்— தமிழர் கூட்டணி மீது கொண்ட அவநம்பிக்கையினாலோ — விரக்தியாலோ வெடித்து வருகின்ற கேள்விகள் என்று எதிரிகள் தப்புக் கணக்குப் போடுவார்களாயின் அவர்கள் ஏமாந்து விடுவார்கள்.

தமிழர் கூட்டணி மீது தமிழர்கள் எவருக்கும் ஒரு துளி அவநம்பிக்கையாவது ஏற்பட்டு விடவில்லை. தமிழர் கூட்டணி மீது ஆழ்ந்த நம்பிக்கையும், விசுவாசமும் தமிழ் மக்களுக்கு என்றும் உண்டு.

தமிழர் கூட்டணி ஒன்றின் மூலமாகத்தான் இந்நாட்டில் தமிழினத்தின் சுதந்திரத்தையும் உரிமைகளையும் மீட்டுக்கொள்ள முடியும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை தமிழ் மக்களுக்குண்டு.

இதனால்தான் 'தமிழர் கூட்டணி' உருவாகியதென்ற செய்தி வந்ததுமே தமிழ்க்குலம் குதூகலத்தில் ஆழ்ந்தது!

தமிழர் கூட்டணியின் ஆணைப்படி, குடியரசு அரசியல் திட்டம் எனும் சிங்களக்கொடியரசுத்திட்டம் இந்நாட்டில் திணிக்கப்பட்டு—தமிழினமும் தமிழும அவமதிக்கப்பட்டு உரிமை மறுக்கப்பட்ட மே 22ம் நாளையும் அதையடுத்து வந்த 23, 24ம் நாட்களையும் தமிழ் இலங்கையடங்கிலும துக்கநாளாக — கரிநாளாக தமிழினம் முழுவதும் அனுட்டித்தது.

இப்போராட்டத்தின் காரணமாக எழுபதுக்கு மேற்பட்ட இளைஞர்கள் காராக்கிருகத்துள் தள்ளப்பட்டு—சிறைத்துன்பங்களை ஏற்று அண்மையிலேதான் வெளியே வந்தனர்!

இன்றும் உணர்ச்சிக்கவிஞர் காசி ஆனந்தன், ஆனந்த விநாயகம் ஆகியோருட்பட சில இளைஞர்கள் சிறைக்கதவுகளுக்கு பின்னால் வாடிக்கொண்டிருக்கிறார்கள்—கடந்த பல திங்களாக!

தமிழினத்தின் சார்பில் விடுக்கப்பட்ட ஆறு அம்சக் கோரிக்கைகளை அரசு அலட்சியப்படுத்தியதை ஆட்சேபித்து அண்ணல் காந்தி அவதரித்த அக்டோபர் 2ல் ஹர்த்தால் அனுட்டிக்கும்படி தமிழர் கூட்டணி ஆணையிட்டது. அந்த ஆணையை அப்படியே ஏற்று செயல்படுத்தினர் தமிழ் மக்கள்!

அரசியல் சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தும் — தமிழினத்தின் சுதந்திரக் கோரிக்கையை முன்வைத்தும் — தமிழர் கூட்டணித் தலைவர் பெரியவர் தந்தை செல்வா — ஆட்சியாளருக்கு சவால் விடுத்து தமது தேசிய பேரவை உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்தார். தமிழினம் முழுவதும் ஆர்ப்பரித்து எழுந்து தந்தையின் பின்னால் அணிவகுத்து — அவரது சுட்டு விரல் அசைவுக்காக இன்று காத்துக்கிடக்கிறது!

இப்படி தமிழர் கூட்டணி எதை ஆணையிடுகிறதோ அதையெல்லாம் செய்ய தமிழ்க் குலம் தயாராகவேயிருக்கிறது! அவ்வளவு தூரம் தமிழர் கூட்டணியிடம் தமிழ் மக்களுக்கு உறுதியான நம்பிக்கை இருந்துகொண்டேயிருக்கிறது!

ஈழத் தமிழினம் பன்னூறு ஆண்டு தவமிருந்து பெற்ற தலைவர் தந்தை செல்வாவின் வழி காட்டுதலின் கீழ் உள்ள தமிழர் கூட்டணியை நடத்திச் செல்லும் தலைவர்களின் அந்தரங்க சுத்தியிலும், தியாக மனப்பான்மையிலும், இலட்சிய உறுதியிலும் தமிழினம் பூரண நம்பிக்கை வைத்திருக்கிறது.

ஆனால் தமிழர் கூட்டணியின் 'ஆமை வேகம்' தான் தமிழ் மக்களுக்கு — குறிப்பாக இளைஞர்களுக்கு இன்று சோர்வையும், சலிப்பையும் உண்டாக்கப் பார்க்கிறது!

தமிழர் கூட்டணியினரும் ஒன்று உணர்தல் வேண்டும். மக்களுக்கு, சலிப்பும் சோர்வும் ஏற்பட்டு — நம்பிக்கையில்லாமல் ஏதும் ஆகாது எனும் விரக்தி நிலையை அடைந்து — அடிமை வாழ்வை ஜீரணித்துப் பழகிவிட்டார்கள் என்றால் அதன் பின்னர் சுதந்திர இயக்கத்தை நடத்துவது இலேசான காரியமல்ல!

தமிழர் புத்தாண்டாம் தை முதல் நாளிலிருந்து, தமிழ் பகுதிவரும் அமைச்சர்களுக்கு எதிராக கறுப்புக் கொடிபிடித்து ஆர்ப்பாட்டம் செய்யவேதென முடிவு எடுத்து — அதை செயல்படுத்தவும் ஆரம்பித்திருக்கிறது தமிழர் கூட்டணி.

ஆனால் இதனால் மட்டும் பயனில்லை — தமிழர் கூட்டணி தலைமைச் செயலாளர் அமிர்தலிங்கம் அறிவித்துள்ளதுபோல — கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து இனவிடுதலைக்கான இயக்கங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும்! மக்களின் எழுச்சியும் விடுதலை உணர்வும் தணிந்து போகாதபடி இன, மொழி, பிரதேசபாதுகாப்புக்கு தமிழர் கூட்டணி தக்க நடவடிக்கைகளை தாமதமின்றி மேற்கொண்டாக வேண்டும்! மக்கள் பிரச்சினைகளை முன்வைத்து அரசியல் இயக்கங்களை நடத்தியாக வேண்டும்!!

இதுவே தமிழ் இளைஞர்கள் இன்று விடுக்கின்ற கோரிக்கையாகும்! தமிழர் கூட்டணி ஆவன செய்யும் என்று நம்புகிறோம்!

# பத்திரிகைச் சுதந்திரத்துக்கு சூழ்ந்த ஆபத்து நீங்கவில்லை!

## சபாநாயகரின் நீதி நிறைந்த தீர்ப்பினால் 'ஆபத்து' ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது!

### மசோதாவைக் கைவிடும்படி கிளர்ச்சி தேவை!

பத்திரிகை சபை மசோதாவை, அரசியல் சட்ட நீதி மன்றத்தின் தீர்ப்புக்குக்கூட விடாமல் — அவசர அவசரமாக சர்வாதிகாரமான முறையில் தேசிய பேரவையில் கொண்டுவந்து நிறைவேற்ற துடியாய்த் துடித்தனர் ஆட்சியாளர்கள் ஆனால் செங்கோல் வளையாது நடுநிலை நின்று தேசிய பேரவையின் சபாநாயகர் ஸ்டான்லி திலகரத்தின அவர்கள் அளித்த தீர்ப்பு சர்வாதிகார வெறி பிடித்த ஆட்சியாளரின் ஆசையில்—குறிப்பாக சமசமாஜத் தலைவர்களான டாக்டர் என். எம் பெரேரா, டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா ஆகியோரது எண்ணத்தில் மண்ணைப் போட்டுவிட்டது.

அரசாங்கக் கட்சி, எதிர்க் கட்சி என்ற பாகுபாடின்றி நடுநிலை நின்று — பத்திரிகை மசோதாவை முறைப்படி நியமிக்கப்படும் அரசியல் சட்ட மன்றத்தின் தீர்ப்புக்குவிடாமல் தேசிய பேரவையில் விவாதிக்கமுடியாது என்று தீர்ப்பளித்ததன் மூலம் சபாநாயகர் ஸ்டான்லி திலகரத்தின இலங்கை மக்கள் அனைவரினதும் பாராட்டைப் பெற்றுவிட்டார்.

அரசாங்கக் கட்சியினரால் சபாநாயகர் பதவிக்கு அவர் அமர்த்தப்பட்டிருந்தும் கூட-எவ்வித தயவுதாட்சண்யமுமின்றி, அரசாங்கத்தின் போக்குக்கு முரணாகத் தீர்ப்பளித்து நீதியை நிலைநாட்டியதன் மூலம், மக்களுடைய உள்ளங்களில் நீங்கா இடத்தை சபாநாயகர் பெற்றுவிட்டார்.

சபாநாயகரை பதவியில் அமர்த்தியவர்கள் நாங்களே — அவரை அப்பதவியிலிருந்து நல்ல காரணங்களுக்காகவோ — தீய காரணங்களுக்காகவோ —காரணம் எதுவுமின்றியோ நாங்கள் நினைத்தால் நீக்க முடியுமென்று அதிகாரத் திமிர் பிடித்து, சர்வாதிகாரத் தொனியுடன் அரசியலமைப்புச்சட்ட அமைச்சர் ஆணவத்துடன் அங்காரக்குரலில் பேசியபோதிலும் அதற்கெல்லாம் அஞ்சாது துணிச்சலுடன் சபாநாயகர் தமது தீர்ப்பை வழங்கிவிட்டார்,

ஆனாலும் பத்திரிகை சுதந்திரத்தை சுற்றிக்கொண்டிருக்கும் ஆபத்து இத்துடன் அகன்றுவிட்டதென்றோ பத்திரிகை சுதந்திரம் பாதுகாக்கப்பட்டுவிட்டதென்றோ நாட்டு மக்கள் யாரும் ஏமாந்துபோய்விடக்கூடாது.

பத்திரிகைசபை மசோதாவை கைவிடுவது பற்றி



ஆணவத்துக்கு தலையடி!

அரசு கிஞ்சிற்றும் சிந்திக்கவில்லை. எப்படியும் நிறைவேற்றியே தீருவது என்பதிலிருந்து சிறிதும் பின்வாங்கவில்லை.

சபாநாயகர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்போவதாக சமசமாஜத் தலைவரும் நிதியமைச்சருமான டாக்டர் என். எம். பெரேரா தேசிய பேரவையில் கூறியதைத் தொடர்ந்து வெளியிலும் அதையேகூறித்திரிகிறார் ஆயினும் பிரதமரின் தீர்ப்பே இதில் முடிவானதாக இருக்கும்.

கொக்கரித்துத் திரியும் சமசமாஜிகள் வாலைச்சுருட்டிக்கொண்டு சேலைத்தலைப்பின் பின்னால் ஒதுங்கிக்கொண்டு, தங்கள் பதவிகளைக் காப்பாற்றவே முயலுவார்கள். சமசமாஜிகளின் வாய்ச்சவடால்களுக்கு பிரதமர் இடம் கொடுக்கப்போவதில்லையென்றே அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

ஆயினும்— சபாநாயகரின் தீர்ப்புப்படி பத்திரிகைசபை மசோதாவை, அரசியல் சட்ட நீதிமன்றத்துக்கு சமர்ப்பித்து —அதன் தீர்ப்பை அறிந்த பின்னர் அரசு எப்படிச் செயல்படப்போகின்றதென்பதே இன்றுள்ள கேள்வி.

அரசியல் சட்ட நீதிமன்றம் பத்திரிகைச் சபை மசோதா அரசியல் சட்டத்துக்கு முரண்பட்டது என்று சபாநாயகருக்கு ஆலோசனை கூறினால், சபாநாயகர் அதை ஏற்கலாம்; அல்லது நிராகரிக்கலாம். அதற்கு அவருக்கு உரிமையுண்டு.

ஆனால் சபாநாயகர் அவர்கள், தாம் நீதியும், மனச்சாட்சியும், நடுநிலையும் நிறைந்தவர் என்பதை எதிர்க்கட்சியின் ஒழுங்குப் பிரச்சினையை ஏற்றுக்கொண்டதன்மூலம் நிரூபித்துவிட்டார். எனவே இனிவரும் இத்தகைய சந்தர்ப்பங்களிலும்கூட அவரிடம் நீதியையே நிச்சயம் எதிர்பார்க்கலாம்.

(7-ம் பக்கம் பார்க்க)

## சபாஷ் கதிரவேற்பிள்ளை!

கோப்பாய்க் கோமகன் அமரர் வன்னியசிங்கம் அவர்கள் அலங்கரித்த கோப்பாய்த்தொகுதியின் தேசிய அரசு பேரவை உறுப்பினராக இருந்து தமிழினத்துக்கு விசுவாசத்துடன் பணியாற்றிவரும் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் திரு. சி. கதிரவேலுப்பிள்ளை அவர்களின் புகழும் பெருமையும், பத்திரிகை சபை மசோதா மீது தேசிய பேரவையில் எழுப்பப்பட்ட ஒழுங்குப் பிரச்சினை மீது அவர் ஆற்றிய உரையினால் மேலும் ஒருபடி உயர்ந்துவிட்டது.

ஒழுங்குப் பிரச்சினை மீது திரு. கதிரவேற்பிள்ளை ஆற்றிய உரையில், எடுத்துக்காட்டப்பட்ட சட்ட நுணுக்கங்களும், தர்க்கரீதியான வாதங்களும், தெளிவான கருத்துக்களும் தாம், சபாநாயகர் தேசிய பேரவையில் நல்லதோர் தீர்ப்பை அளிப்பதற்கு ஏற்ற சூழ்நிலையை அமைத்துக்



கொடுத்திருக்கும் என்பதில் தடையில்லை.

தங்கமூளையென்றும் சட்ட நிபுணர் என்றும் கூறப்படும் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவினாலேயே திரு. கதிரவேற்பிள்ளையினால் எழுப்பப்பட்ட சட்டப் பிரச்சினைகளுக்கும் தர்க்கவாதங்களுக்கும் பதிலளிக்க முடியாமற் போய்விட்டது. திரு. கதிரவேற்பிள்ளை, தம்முடைய திறமையான வாதத்தினால், மாற்றாரும் போற்றுகின்ற ஒரு நிலையை ஏற்படுத்தி தமிழினத்தின் புத்திக்கூர்மையையும் அறிவையும் எடுத்துக்காட்டிவிட்டார்.

திரு. கதிரவேற்பிள்ளையின் அரசியல் வைரியும் சிறந்த வழக்கறிஞருமான ஹபதறுவ பா. உ. திரு. பிரின்ஸ் குணசேகராவே, கதிரவேற்பிள்ளையின் வாதத்திறமையை மனம் விட்டு பாராட்டியுள்ளார்.

"கோப்பாய் பா. உ. நிகழ்த்தியஉரை மிகவும் சிறந்ததும் நுணுக்கமானதுமாகும். அவர் கிளப்பிய அம்சங்களுக்கு தக்க பதில் அளிக்கப்படவில்லை! அரசியல் விவகார அமைச்சர் (டாக்டர் கொல்வின்) அவரின் வாதங்களுக்குப் பதில் அளிக்கமுடியாமல் திணறிப் போனார்..." என்று பிரின்ஸ் குணசேகரா பாராட்டிப் பேசியுள்ளார்!

பிரின்ஸ் குணசேகரா என்ன— இன்று திரு. கதிரவேற்பிள்ளையை நாடே பாராட்டுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'துரோக சூரியா! வராதே தமிழ் இலங்கைக்கு!'

## எட்டப்பர் குலம் வெருண்டோட இளைஞர்கள் எழுப்பிய கோஷம்!

## தபாலமைச்சருக்கு எதிராக வேலணையில் நடந்த கறுப்புக்கொடி ஆர்ப்பாட்ட விபரம்!

தமிழ்ப் பகுதிகளுக்கு வரும் அமைச்சர்களுக்குக் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்துவதென 13-1-73 பிற்பகல் 2-மணி அளவில் தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக் குழு முடிவு செய்தது. 15-1-73 இல் அமைச்சர் குமாரசூரியர் பருத்தித்துறை, சங்குவேலி, நயினதீவு, வேலணை எனும் இடங்களுக்கு 'விஜயஞ்' செய்யத் திட்டமிட்டிருந்தார்.

இவருக்குக் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்துதற்கு வேண்டியஒழுங்குகளைச்செய்ய ஒருநாள் மட்டுமே அவகாசம் இருந்தது. அந்த நாளும் தமிழரின் திருநாளாம் தைப் பொங்கல் நாள். எனினும் ஆர்வம் மிக்க தன்மானத் தமிழ் இளைஞர்கள் ஒரு நாள் அறிவித்தலுடன் நூற்றுக்கணக்கில் திரண்டனர்.

அமைச்சர் விஜயஞ் செய்யுமிடங்களில் தமிழ் இனத்துக்குச் சவால் விடும் முறையில் அமைந்திருந்த நிகழ்ச்சி வேலணை மகாவித்தியாலயப் பாராட்டு விழாவே! ஏனைய நிகழ்ச்சிகள் அவருடைய சொந்த அமைச்சுடன் தொடர்புபட்டவை! இந்த நிகழ்ச்சி கல்வி அமைச்சுடன் தொடர்புபட்டது; குமாரசூரியராலும் சிறீலங்கா சுதந்திரக்கட்சி என்று கூறிக்கொண்டு வயிறுவளர்க்கச் 'செலவுக்கு' காசு கேட்கும் புங்குடுதீவு ப. கதிரவேலு ஞம்பவாலும், அந்தக் கதிரவேலுவின் வாலைப் புதிதாகப் பிடிக்கத் தொடங்கியிருக்கும் ஸ்ருடியோ நாதன் எனும் பொய் புரட்டுக்களில் கைதேர்த்த புகைபடக் கலைஞனும், திட்டமிட்டு வஞ்சந் தீர்ப்பதற்குக் காவலூர் பா. உவுக்குச் சவால் விடும் முறையில் சூழ்ச்சிப் பின்னணியில் உருவாக்கப்பட்டது. அன்றியும், எட்டப்பர் கூட்டத்தினர்களும் புதிதாக ப. நோ. இ. குழுவில் நியமனம் உபதபால் அதிபர் பதவிகள் ஜே. பி. பட்டங்கள் பெறக் கியூவில் நிற்கும் பச்சோந்திகளும் சிறப்புரை நிகழ்த்த அழைக்கப்பட்ட கூட்டம்.

### எட்டப்பர்கள் கூடினர்

இக்கூட்ட அழைப்பிதழில் காணப்படும் எட்டப்பர் கூட்டத்தினரில் சிலரைப் பாருங்கள்.

1. பி. கதிரவேலு (தலைவர் தீவுப்பகுதி சிங்கள சுதந்திரக்கட்சி) 2. எஸ். ஜே. பூராசா. (செயலாளர் தீவுப் பகுதி சிங்கள சுதந்திரக் கட்சி) 3. பொன். தியாகராசன் (செயலாளர் வேலணை சிங்கள சுதந்திரக் கட்சி) 4. ஏ. தியாகராசா பா. உ. 5. அல்பிறட் துரையப்பா 6. எம். சி. சுப்பிரமணியம் நியமன பா. உ; 7. ஏ. விசுவநாதன் எம். எம். சி. 8. ஏ. அருளம்பலம் பா உ. (அழைப்பிதழில் இல்லை, ஆனாலும் கலந்து அமைச்சரை மகிழ்வித்தார்.)

அமைச்சருக்கு நன்றிக்கடன் செலுத்த வழி எல்லாம் பூரண கும்பம் வைத்து மாலையிட்டு மானத்தை விற்கப் பல ஒழுங்குகள் செய்யப்பட்டன. கூட்டத்துக்கு ஆள் சேர்க்க வீடு வீடாகச் சென்று அழைப்பு விடுத்துக் கூட்டப்பட்ட கூட்டம் இது.

### காவலூர் பா. உ. விட்டில் கறுப்புக்கொடி பறந்தது

எனவே இந்தக் கூட்டத்துக்கு அமைச்சர் வரும் பொழுதுதான் கறுத்தக் கொடி காட்டுவதென்று முடிவுசெய்யப்பட்டது. 15-1-73 காலையில் காவலூர்ப் பா. உ. அலுவலக முன்றிலில் அமைச்சர் செல்லும் வேலணை புங்குடு தீவு வீதியின் அருகில் பிரமாண்டமான கறுப்புக்கொடி பறக்கத்தொடங்கிற்று. இவ்வீதியிலுள்ள மின்சாரக் கம்பங்களிலும் கம்பிகளிலும் இரவில் போடப்பட்ட கறுப்புக் கொடிகள் விடிந்தவுடன் அதிகாரிகளால் அகற்றப்பட்டன.

14 ஆம் திகதி இரவு முழுவதும் கூட்டம் நடக்கும் இடப்பகுதி முழுவதும் பொலிசார் ரோந்து சுற்றினர். கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடக்கப் போவதை அறிந்த பொலிசாரும் அன்று தொகையாகப் பல இடங்களையும் காவல் காத்தனர். சி. ஐ. டி. யும் நிறைய உலாவத் தொடங்கியது.

பொலிசு அத்தியட்சகர் ஆரியசிங்காவும் ஏனைய பொலிசு உயர் அதிகாரிகளும் வேலணைச் சந்தியை மையமாகக்கொண்டு வட்டமிட்டனர்.

### அமிர்தலிங்கம் முன்னணியில்

பிற்பகல் 5 மணிக்குக் கூட்டம் தொடங்குமென அச்சிடப்பட்டிருந்தது. 4-00 மணிக்கு முன் தமிழர் கூட்டணித் தலைவர்களும் பலதொகுதிகளிலுமிருந்து வந்த தன்மானத் தமிழ் இளைஞர்களும் காவலூர் பா. உ. வீட்டு முன்றிலில் கூடினார்கள்; அணி வகுத்துக் கூட்டம் நடக்கும் மகாவித்தியாலயத்துக்குப் புறப்பட்டார்கள்.

தமிழர் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அமிர்தலிங்கம் இளைஞர் படையின் முன்னணியில் சென்றார். காவலூர் பா. உ. இரத்தினம் திரு. தருமலிங்கம் பா. உ. திரு. க. துரைரத்தினம் பா. உ. திரு. ந. நவரத்தினம் பா. உ. திரு. ஆனந்தசங்கரி பா. உ. திரு. மு. சிவசிதம்பரம் முதலிய தலைவர்கள் இளைஞர்களுடன் கலந்து சென்றனர்.

இளைஞர்படை மகாவித்தியாலயத்துக்குச் சில நூறு யார் தூரத்தினை அடைந்தவுடன் விழாவை நடத்தும் சிங்கள சுதந்திரக்கட்சி அடிமைகள் சிலர் இவர்களைச் செல்லவிடாது வழிமறித்தனர். பொலிசு அத்தியட்சகரும் பொலிசாரும் இவர்களுடன் சேர்ந்து நின்றனர்.

### புல்லுருவி ஸ்ருடியோ நாதனின் பொய்யும் புரட்டும்

சென்றவர்களுக்கும் தடுத்தவர்களுக்கும் பலத்த வாக்குவாதமும் சொற் போரும் மூண்டது.

திரு. அமிர்தலிங்கம் என்ன நடந்தாலும் நாங்கள் முன்னேறுவோம் என்று சிங்கம்போற் கர்ச்சித்தார். தடுத்தவர்களில் பொய்யும் புரட்டும் பேசி அதட்ட முற்பட்டவர் ஸ்ருடியோ நாதன் எனப்படும் பா. சண்முகநாதனே.

இவர் யாழ்ப்பாணம் நாதன் ஸ்ருடியோ உரிமையாளர். தமிழரசுக்கட்சியின் ஆதரவாளராக இருந்தவர். வித்தியாலயப் பகுதியிருக்கும் மூன்றும் வட்டாரத்தில் காவலூர் பா. உ. வைத் தேர்தலில் தனித்து ஆதரித்து நின்றவர். மக்கள் பலரின் வேண்டுகோளின்படி மண் கும்பான் சாட்டி விஜயரத்தினம் வீதியால் புதிய வஸ் சேவை நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டது. இந்த வஸ் சேவையைத் தடுத்து வஸ் ஓடமுடியாது திருத்தி முடிக்கப்படாமல் கிடக்கும் வீதியால் ஓடச்செய்யுமாறு காவலூர் பா. உ. வை இவர் கேட்டார். அவர் அதற்கு இசையவில்லை. இதனால் வஞ்சம் தீர்ப்பதற்காகத் தீவுத் தொகுதிச் சிறிலங்காக் கட்சி அமைப்பாளர் திரு. கதிரவேலுவைப் பிடித்து அமைச்சர் குமாரசூரியரின் கடைசித் தொண்டரடிப் பொடி ஆழ்வாராகினவர். இந்தப் பாராட்டு விழாவை மும்முரமாக நடத்த முன்னின்று உழைத்த திருத்தொண்டர் இவரே! இதனால் இளைஞர்கள் ஒரு புல்லுருவியை இனங்கண்டு கொண்டனர்.

அடுத்த பெருமகனார் திரு. பொன் தியாகராசா. இவரும் முன்னைய தமிழரசுக் கட்சி ஆதரவாளர். சென்ற தேர்தலில் திரு. நாதன் சொந்தப் பகையைக்காக்க தன்னை ஒழிக்க வேண்டுமென்றே புறக்கணித்தார் என்று கோபாவேசங்கொண்டு தமிழ்க் காங்கிரசில் சேர்ந்து திரு. சிவஞானத்துக்காகத் தேர்தலில் பிரசாரஞ் செய்தவர். தேர்தலில் தோல்வியைக் தழுவியவுடன் வேலணை சிறிலங்கா சுதந்திரக் கட்சியை ஆக்கிப் பொதுச் செயலாளராகத் திருத்தொண்டு செய்பவர்.

இன்னொருவர் திரு. ப. ஐயாத்துரை யாழ்ப்பாணம் சின்னத்துறை பிறதர்சில் பணிபுரிபவர். இவரும் முன் தமிழரசுக்கட்சிச் செயற்குழுக் கூட்ட உறுப்பினராயிருந்து பின் சுயாட்சிக் கழகத்தில் சேர்ந்து நின்று இப்பொழுது சிங்கள சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் வாழ்பவர்.

### கலகம் வரும் திரும்பிப் போங்கள் — பொலிசார் உத்தரவு

தமிழர் கூட்டணி இளைஞர்கள் வலிந்து முன்னேறத் தொடங்கியதைக் கண்ட பொலிசு அத்தியட்சகர் 'கலகம் உண்டாகும் என்று நாங்கள் எண்ணுவதால் உங்களை மேலே போகவிடமாட்டோம் நீங்கள் அமைதியாகக் கலைந்து போகவேண்டும்' எனக் கட்டளை பிறப்பித்தார். இதற்கிடையில் பொலிசார் துப்பாக்கிகளில் குண்டுகளைப் போட்டுச் சுடுதற்கு ஆயத்தமாகினர்.

### அமைச்சருக்குப் போடக் கொண்டு வந்த மாலை போடப்படவில்லை

அமைச்சரை நேரில் சந்திப்பதற்கு வசதியான பகிரங்க வீதியோடு சேர்ந்த பகுதிக்குப் போவோம் என இளைஞர்களும் கூட்டணித் தலைவர்களும் முடிவுசெய்து ஒரு மைல் தூரம் நடந்து அமைச்சரை ஊர்வலமாக அழைத்துச் செல்ல மகர தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த வளைவுக்குச் சென்றனர். அங்கும் மேலே செல்லாமல் பொலிசார் வந்து நின்று தடுத்தனர்.

பொலிசாருக்கும் தலைவர்களுக்கும் ஏற்பட்ட உடன்படிக்கைப்படி அமைச்சர் பகிரங்க வீதியிலிருந்து மகாவித்தியாலயத்துக்குச் செல்லும் சிறுவீதிச் சந்தி அருகில் கறுத்தக் கொடிகள் சகிதம் இளைஞர்கள் அணிவகுத்து நின்றனர்.

இவர்கள் அங்கு வந்து அமைச்சர்களின் வருகையை எதிர்பார்த்துக் கறுப்புக்

(8-ம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் போராட்டத்தின் முன்னோடியே கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம்

## தொண்டர்கள் மத்தியில் அமிர் பேச்சு!

'தமிழ் பிரதேசங்களுக்கு இனி வரும் அமைச்சர்கள் எந்தெந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார்களோ அந்தந்த இடங்களில் எல்லாம் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்துவோம். இந்த இயக்கத்தை வளர்த்து வலுப்படுத்துவதன் மூலம் தமிழினத்தின் விடுதலை இயக்கத்துக்கு மக்களைத் தயார் படுத்தக்கூடிய சூழ்நிலை உருவாகும். விடுதலை இயக்கத்துக்கு கறுப்புக் கொடி இயக்கம் முன்னோடியாக அமையட்டும்.

—இவ்வாறு தமிழர் கூட்டணிச்செயலாளர் நாயகம் நாவலர் அமிர்தலிங்கம் தபாலமைச்சர் செல்லையா குமாரசூரியருக்கு கறுப்புக் கொடி காட்டும் நிகழ்ச்சியில் ஈடுபட்ட தொண்டர்கள் மத்தியில் உரையாற்றிய போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

''கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்துவது நமக்குப் புதியதல்ல. ஆயினும் பலவருட இடைவெளிக்குப் பின் மீண்டும் ஆரம்பித்திருக்கிறோம்.

''கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம், அமைச்சர்களுக்கு எதிராக இனித் தொடர்ந்து நடைபெறும். அவர்கள் வந்திறங்கியது முதல் பங்குபற்றும் ஒவ்வொரு நிகழ்ச்சிகளின் போதும் நாம் ஆர்ப்பாட்டம் செய்வோம்.

''தமிழர் கூட்டணியினராகிய நாம் இரத்தக் களரியை விரும்பவில்லை. அமைதியையும் கட்டுப்பாட்டையும் கடைப்பிடித்தே இன்று இப்போராட்டத்தை நடத்தியுள்ளோம். இன்று இப்போராட்டத்தில் கிழக்கு, வடக்கு மாகாணங்களிலிருந்து சுமார் 600க்கு மேற்பட்ட இளைஞர்கள்



கலந்துகொண்டிருக்கிறீர்கள். உங்கள் அஞ்சாநெஞ்சத்தையும் வீர உணர்ச்சியையும் கண்டு நானே திளைப்படைய வேண்டியுள்ளது. உங்கள் உணர்ச்சியும் விடுதலை வேட்கையும் வளர்க, வாழ்க!''

கூட்டத்தில் உடுப்பிட்டி சிவா, பண்டிதர் இரத்தினம், வீ. ஆனந்தசங்கரி பா. உ., க. துரைரத்தினம் பா. உ. ஆகியோரும் உரையாற்றினர்.

கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் சம்பந்தமாக திரு. அமிர்தலிங்கம் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையொன்றில் கூறியுள்ளதாவது:-

'தமிழர் கூட்டணித் தொண்டர்கள் கறுப்புக் கொடி காட்டியதைத் தான் காணவேயில்லை என்று அமைச்சர் குமாரசூரியர் வேலணை மகா வித்திலாலய திறப்பு விழாவில் பேசும்போது கூறிச் சமாளித்தது பெரும் சிரிப்புக்கிடமானதாகும்.

'நாங்கள் வேலணை மகா வித்தியாலயத்துக்குப் பக்கத்தில் நின்று கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்தவே போயிருந்தோம். பொலிஸ் சுப்ரின்டன் அங்கு நாம் நிற்பதை அனுமதிக்கவில்லை. பக்கத்திலுள்ள சந்திக்குப் போகுமாறு தெரிவித்தார். அந்த சந்தியில் வைத்துத் தான் ஊர்வலம் ஆரம்பமாக விருந்ததால் அதுவும் மிகப் பொருத்தமான இடமேயெனக் கருதி அங்குபோய் வீதியோரமாக வரிசையாக நின்றோம்.

பொலிஸ் சுப்பிரின்டன் அவ்விடம் வந்து வீதியோரத்திலிருந்து சற்று தள்ளி நிற்குமாறு தெரிவிக்கவே அதையும் ஏற்றுக்கொண்டோம்.

கொடி காட்டினாலும் கோஷம் எதுவும் போடக்கூடாதென அவர் கேட்டார். இதற்கு நான் உத்தரவாதமளிக்கமுடியாதென்றும் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் தொண்டர்கள் கோஷம் எழுப்பக்கூடும் எனவும் தேவைப்பட்டால் பொலிசார் எப்படியும் நடந்துகொள்ளலாமெனவும் பதிலளித்தேன். அந்த அளவில் அவர் போய்விட்டார்.

[illegible] வந்தபோது தொண்டர்கள் கறுப்புக்கொடி காட்டி, கோஷமெழுப்பினர்கள்.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'உரிமைக்கிளர்ச்சியை ஆயுதங் கொண்டு அடக்க நினைத்தால்....!

# தமிழ் ஈழமும் ஒருவங்கதேசமாகும்!

## பிரதமருக்கு உடுப்பிட்டி சிவா எச்சரிக்கை!

'சில கொம்யூனிஸ்ட் நாடுகளிலிருந்து கிடைத்த ஆயுதங்களைப் பயன்படுத்தி இந்நாட்டுத் தமிழ்த்தேசிய இனத்தின் உரிமைப்போராட்டத்தை நசுக்கிவிடலாம் என்று பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா கற்பனை செய்து கொண்டிருக்கிறார். அப்படி அவர் நடக்க முயற்சிப்பாராஞல் பங்களாதேஷில் நடைபெற்ற சம்பவங்களைப்போன்றே இங்கும் நடக்கும் என நான் அவரை எச்சரிக்க விரும்புகிறேன். பங்களாதேஷ் மக்கள் ஆரம்பத்தில் தனிநாடு கோரவில்லை. மாநில சுயாட்சியும் தங்கள் மொழிக்கு உரிமையுமே கேட்டார்கள். ஆனுல் மேற்கு பாகிஸ்தான் ஆட்சி, மக்களின் இந்தக் கோரிக்கையை பட்டாளத்தை ஏவி நசுக்க முயன்றது. அதைத்தொடர்ந்து தான் தனி வங்காளதேசம் உருவாகியது என்பது சரித்திரம். இந்நாட்டில் வாழும் தமிழினத்தவரின் உரிமைப்போராட்டத்தை ஆயுதப்படையை ஏவி நசுக்கி விடலாம் என்று கனவுகாணும் பிரதமர், முதலில் இந்த வரலாறுகளைப்படித்துப் பார்க்கட்டும்!

—இவ்வாறு புத்தூரில் தந்தைசெல்வாவுக்கு அளிக்கப்பட்ட வரவேற்புபசாரத்தில் கலந்துகொண்டு பேசிய உடுப்பிட்டி சிவா முழக்கமிட்டார்.

அவர் மேலும் பேசியதாவது:-

''இன்று தமிழ் மக்கள் மத்தியில் இரண்டே இரண்டு அணிகள் தாம் உண்டு. ஒன்று தமிழர் தந்தை செல்வா அவர்களுடைய தலைமையில் இயங்கும் எமது தமிழர் கூட்டணி. மற்றது, அமைச்சர் குமாரசூரியர் தலைமையில் இயங்கும், தேர்தலுக்கு பின் தமிழ்ப்பகுதியில் முளைவிட்ட ஒரு கையளவு ஆதரவாளர்களைக்கொண்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சி அணி. அதாவது அரசாங்க ஆதரவாளர்களைக்கொண்ட அணி. தமிழர் கூட்டணி தமிழ் மக்களின் சுதந்திரத்துக்காக போராடுகின்றது. குமாரசூரியர் அணி தமிழினத்தை அடிமைப் பாதையில் தள்ள முயற்சிக்கிறது! இதில் எந்த அணியை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்கிறார்கள் என்பதை வரவிருக்கும் காங்கேசன் துறை இடைத்தேர்தல் நிரூபித்துக்காட்டும். இந்த உண்மையை உணர்ந்து தான், அச்சத்தின் காரணமாக இடைத்தேர்தலை நடத்தாது அரசாங்கம் இழுத்தடித்து வருகிறது.

### பிரியமாட்டோம்.

தமிழர் கூட்டணியைப் பிரிக்கப் பெரும் சதி நடக்கிறது. ஆனந்தசங்கரியின் பெயரால் ஒரு பத்திரிகை இந்தச் சூழ்ச்சியைச் செய்கிறது. அது பொய்ச்செய்திகளால் மக்கள் மத்தியில் தவறான எண்ணத்தை ஏற்படுத்தப் பார்க்கிறது. எந்தச் சக்தியாலும் எங்கள் ஒற்றுமையைப் பங்கப்படுத்தமுடியாது. நமக்குள் கருத்து வேறுபாடு எழலாம். அதை நமக்குள்ளேயே பேசி ஒரு முடிவுக்கு வருவோமேதவிர பிரியமாட்டோம்.

நாம் உரிமை பெறும்வரை அமைச்சர்கள் எந்தப் போர்வையில் வந்தாலும் எதிர்ப்போம். அமைச்சர்கள் பங்குபற்றும் நிகழ்ச்சிகளில் மட்டுமல்ல. அவர்கள் செல்லும் பாதைகளிலும் பொதுமக்கள் கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட வேண்டும். இனிமேல் நாம் தீவிரமாக எதிர்ப்புக்காட்டுவோம்.

நாகரீகம் படைத்த எந்த நாடும் சிறுபான்மை இன மக்களின் உரிமையை அரசியல் திட்டத்தின்மூலம் நிலைநாட்டத் தவறியதில்லை. இலங்கையில் மட்டும் அதற்குமாருக நடந்திருக்கிறது. அரசியல் திட்டத்தைத் திருத்துமாறு 3 மாத அவகாசம் கொடுத்தோம். எம் 6 அம்சக் கோரிக்கைகளும் புறக்கணிக்கப்பட்டுவிட்டன. அதே சமயம் வெளிநாட்டு ஆயுதபலத்தால் எம்மை அடக்கப்பார்க்கிறார்கள்.

ஆறு அம்சக் கோரிக்கைகளுக்கான எமது போராட்டம் எங்குபோய் முடியும் என்பதை அரசாங்கம் சரித்திர ஏடுகளைப் புரட்டிப் பார்த்து அறியட்டும். ஐரிஸ் மக்களினதும் வங்காளத்தினதும் போராட்ட முடிவுகள் இந்த அரசாங்கத்துக்கு ஒரு பாடமாக அமையலாம்.

எமது இயக்கத்தை அமைச்சர் குமாரசூரியர் மூலமோ வெளிநாட்டு ஆயுதங்களினுலோ அடக்கமுடியாது. இறுதி வெற்றி நியாயத்தின் பக்கமே இருக்கும்.

### ஆனந்தசங்கரி பேச்சு

கிளிநொச்சி பா. உ. திரு. வீ. ஆனந்தசங்கரி பா. உ. பேசியதாவது:-

''தமிழர் கூட்டணிக்கும் எனக்கும் ஏதோ அபிப்பிராயபேதம் இருப்பதாக சொல்லப்படுவது தவறு. அப்படி அபிப்பிராய பேதம் ஏதாவது இருக்குமானுல் கூட்டணியின் வேகம் போதாது என்பதில் இருக்குமே தவிர கொள்கையளவில் எந்தவித கருத்து மாறுபாடுமில்லை. இதனை அபிப்பிராய பேதம் என்று சொல்லமுடியாது.

நான் தமிழர் கூட்டணியில் சேருமுன் அரசாங்கத்தில் சிறிதுகாலம் இருந்தேன். சோஷலிச அரசாங்கங்களுக்குத் தமிழ் மக்கள் எதிராக இருக்கிறார்கள் என்று ஒரு பொதுவான குற்றச்சாட்டு இருந்து வந்தது. இதனைப் போக்கவே நான் அரசாங்கத்தில் சேர்ந்தேன். அங்கு தமிழன் தன் மானத்துடன் தலைநிமிர்ந்து வாழமுடியாது எனக்கண்டதும் அரசாங்கத்தைவிட்டு வெளியேறினேன். சிங்கள மக்களுடன் தமிழ் மக்கள் இனியும் சேர்ந்து வாழலாம் என்பதில் நான் நம்பிக்கையை இழந்துவிட்டேன். எம்மில் ஒரு சிலரை வைத்துக்கொண்டு அரசாங்கம் தமிழினத்தின் கழுத்தை அறுக்கப் பார்க்கிறது. இதை நன்கு உணர்ந்தே அரசாங்கத்தைவிட்டு வெளியேறினேன்.

தமிழ் பகுதிகளில் வைத்து மட்டும அமைச்சர்களைப் பகிஷ்கரித்தால் போதாது. அவர்களது அலுவலகங்களிலும் வைத்துப் பகிஷ்கரிக்க வேண்டும், எனவேதான் அமைச்சர்களிடம் நாம் எந்த உதவியும் கேட்டுச் செல்லக்கூடாது என்றும் இந்த நிலையிலேயே கறுப்புக்கொடி காட்டப்படவேண்டும் எனவும் வற்புறுத்தி நின்றேன். மந்திரிகளை நாம் ஏற்கவில்லை. அரசாங்கத்தையும் ஏற்கவில்லை. இந்த நிலையில் தான் கறுப்புக்கொடி காட்டுவது சரியானதென்று கூறினேன்.



கறுப்புக்கொடி காட்டுவதை நான் எதிர்ப்பதாக வெளியான தகவல் தவறானது. கறுப்புக்கொடி காட்டுவதற்கு நான் பயந்தவனல்ல.

இன்றைய அரசாங்கம் சோஷலிசத்தைப்பேசுகிறது அதே சோஷலிசத்தைக் குழிதோண்டியும் புதைக்கிறது. அத்தகைய அரசாங்கத்தை ஒருபோதும் ஆதரிக்க முடியாது. இன்னும் பத்து வருடத்தில் தமிழரான அரசாங்க ஊழியர்கள் ஊருக்கு ஒருவர்தான் இருக்க முடியும். அவ்வளவுக்கு ஒழிப்பு வேலை நடக்கிறது.

தமிழன் சிங்களமொழியைப் படிப்பதால் இந்த ஆபத்தில் இருந்து மீளமுடியாது. சிங்கள மொழியில் தேறியவர்களே தமிழர் என்பதற்காக வேலைவாய்ப்பின்றி ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள். சிங்களம் படித்தால் மட்டுமல்ல ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் சேர்ந்தாலும் தமிழன் உத்தியோகம் பெற முடியாது.

ஆகவே வயிறுவளர்க்கும் நோக்கத்துடன் சிங்களம் படிப்பதும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் சேர்ந்து அரசாங்கத்தின் அடிமையாகக் காட்டிக்கொள்வதும் அவமானம். அத்தகைய மானம் கெட்ட தமிழன் யாராக இருந்தாலும் அவர்களின் கலியாணவீடு, மரணச்சடங்கு ஆகியவற்றில் கூட சேர்த்துக்கொள்ளாது புறக்கணிக்கவேண்டும். அவர்களைத் தனிமைப்படுத்தி ஒதுக்கினுல்தான் உணர்ச்சி ஏற்படும். இப்படிச்செய்ய வேண்டும் எனப் பேசிப் பயனில்லை. உடனடியாகச் செயலில் இறங்குமாறு பொது மக்களைக்கேட்டுக்கொள்கிறேன்.

### நாவலர் முழக்கம்

தமிழர் கூட்டணியின் தலைமைச் செயலாளர் நாவலர் அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது:—

திரு. செல்வநாயகம் இனத்தை விடுதலை செய்வதற்கு முதற்படியாக பதவியிலிருந்து தன்னை விடுதலை செய்திருக்கிறார். விடுதலைப் போராட்டத்தில் எதிர்காலத்தில் தமிழினம் செய்ய வேண்டிய தியாகங்களுடன் ஒப்பிடும்போது இதனை ஒரு பெரிய தியாகம் எனறு சொல்லமுடியாது.

ஒரு சில பத்திரிகைகள் ஆட்சியாளரின் கைப்பொம்மைகளாக இருந்துகொண்டு திரு. ஆனந்தசங்கரி எம். பி. பற்றி அடிக்கடி பொய்யான தகவல்களை வெளியிட்டுவருகின்றன. ஒரு சில அமைச்சர்கள் தொலைபேசியில் பத்திரிகைகளை வழிநடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அமைச்சர் குமாரசூரியர் என் பாடசாலைத் தோழர் தொழில்நுட்பக் கல்லூரிக்குச் செல்லும்வரை இருவரும் ஒன்ருகப்படித்தோம். இன்று சிங்கள ஏகாதிபத்தியத்தின் கையாளாக இருந்து தமிழினத்தைக் காட்டிக் கொடுத்து வருகிறார். அவருக்கு துணிச்சல் இருப்பின் அபேட்சகராக காங்கேசன் துறைத்தொகுதியில் போட்டியிடட்டும்.

### தமிழாராய்ச்சி மகாநாடு

மேயர் துரையப்பா தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டின் பேரால் ஏதோ எல்லாம் பேசுகிறார். இது தமிழுக்காகத் தமிழரால் நடத்தப்படும் மகாநாடாக இருக்கட்டும்; அமைச்சர்கள் இந்த மகாநாட்டுக்கு வந்தால்மிகப் பிரமாண்டமான அளவில் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்துவோம். இதனை மகாநாட்டு நிர்வாகிகளுக்கு முன்கூட்டியே தெரிவிப்போம். எங்கள் எதிர்ப்பு அகிம்சை முறையில் இருக்கும். உலகத்துக்கு எம் எதிர்ப்பை எடுத்துக்காட்டுவோம். வாய்ப்பேச்சில் இருந்துவிடக்கூடாது.

---

# கிறிஸ்தவ இளைஞர்களும்

## பொங்கல் விழாவெடுத்தனர்!

உண்டி கொடுக்கும் உழவனின் உன்னத விழாவாகிய பொங்கல் விழாவை, சாதி மத பேதமின்றி அனைத்துத் தமிழரும் ஒன்று கூடிக் கொண்டாடிட வேண்டும் என்பதை வலியுறுத்தும் முகமாக, தமிழ் கிறிஸ்தவ இளைஞர் கழகத்தினர் அண்மையில் மேற்படிக் கழகப்போஷகரான அருட் திரு. செல்வரத்தினம் (செல்வம்) அடிகளாரின் தலைமையின் கீழ், கொட்டாஞ்சேனை புனித லூசியாப் பங்கு மண்டபத்திலே பொங்கல் விழாவை வெகு விமரிசையாகக் கொண்டாடினுர்கள்.

பங்கிலிருந்தும் வெளியிலிருந்தும் பல எதிர்ப்புக்களும், இடர்ப்பாடுகளும் ஏற்பட்டனவாயினும் அவற்றைத் துச்சமென மதித்து இவ்விளைஞர்கள் மேற்படி விழாவைக் கொண்டாடிட பெரிதும் ஊன்றுகோலாயிருந்தவர் அருட் திரு. செல்வரத்தினம் அவர்களாவர் இவ்விழாவின் மூலம் தமிழினத்தின் ஐக்கியம் வலுப்படுத்தப்பட்டுள்ளது என்றுல் அது மிகையாகாது; மேலும் தமிழ் கிறிஸ்தவ இளைஞர் கழகத்தினரும் குறிப்பாக அருட் திரு. செல்வரத்தினம் அவர்களும் தமிழ் மக்களின் உள்ளங்களிலே இடம்பெற்றுவிட்டார்களென்பது மறுக்கமுடியாத உண்மை.

பொங்கல்விழாவின் முதற்படியாகச், சாந்த லூசியா ஆலயத்திலே அதிகாலை 6 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட திருப்பலிப் பூசையிலே, கும்பம் வைத்துக் குத்துவிளக்கேற்றி; அரிசியும் நெல்லும், பாகும் பருப்பும், தேனும்பாலும், பலாவும், மாவும் இன்னும் பல பொருட்களும் ஒப்புக்கொடுத்துத் தமிழரின் பண்பாட்டைத் தெளிவுபடுத்தினர். தொடர்ந்து காலை 8 மணிக்குச் சம்பிரதாயபூர்வமாகப் பொங்கியுண்டு மகிழ்ந்தனர்.

இவற்றிற்கெல்லாம் சிகரமிட்டாற்போல் அன்று மாலை 6.00 மணியளவிற் கலைவிழாவொன்றையும் நடாத்தினர். மேற்படி விழாவிற்கு மகுடமிட்டாற்போல் அமைந்திருந்தது அலங்காரம். வாயிலிலே வாழை மரமும்; வண்ணமிட்ட கோலமும்; குருத்தோலைத் தோரணமும்; கும்பமுடன் குத்துவிளக்கும் சேர்ந்து எங்கே தமிழ் நங்கை வந்து களிநடம் புரிவதற்கோ இக்கவினுறு களரியமைக்கப்பட்டது, என்று எண்ணும்படி செய்துவிட்டது.

வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்ட இக்கலைவிழாவைக் கழக அமைப்பாளர் அருட்திரு செல்வரத்தினம் அவர்கள் தமது ஆரம்ப உரையுடன் தொடக்கிவைக்க, வித்துவான் திரு. இரா. சோதிநாதன் (சமாதான நீதவான்) அவர்களும் அன்புமார்க்கச் சங்கத்தலைவரும், இஸ்லாமியச் செய்திப்பத்திரிகை 'ஞானக் கடல்' ஆசிரியருமான அன்பர் பூபதிதாசர் அவர்களும் சிறப்புச் சொற்பொழிவாற்றினர்.

தொடர்ந்து செல்வி சுகிர்தராணி சின்னத்துரையின் நடன விருந்தும், செல்வன. செந்தில்நாதன் சுந்தையா (மிருதங்கம்) செல்வி. ஞான சௌந்தரி சுப்பராயபிள்ளை (வயலின்) ஆகியோரில் பக்கவாத்தியங்களுடன் செல்விகள் தேவகுமாரி இராசையா, உயாராணி நடராஜா, வேரஜினி பாஞுந்து ஆகியோரின் இன்னிசைக் கச்சேரியும், அசோகன் சண்முகநாதன் (மிருதங்கம்) செல்வி. சியாமளா சந்திரசேகரம் (வயலின்) ஆகியோரின் பக்கவாத்தியங்களுடன் செல்வி. வசந்தமலர் இராசையாவின் இன்னிசையும் இடம் பெற்றது.

இவற்றைத் தொடர்ந்து திருவாளர் எஸ். எஸ். கணேசபிள்ளை (வரணியூரான்) எழுதிய 'சின்னம்மா' எனும் நாடகமும் நடைபெற்றது. இந்நாடகத்திலே நடித்த கழக உறுப்பினர், செல்வர்கள். பாலேந்திரன் சேவியர், தேவதாஸ் சிறிநாதன், ஜெரிகிறிஸ்தோபர் சின்னத்துரை இராமச்சந்திரன் வெஸ்லி பஸ்தியாம்பிள்ளை, கிரகரி பாஞுந்து, செந்தில்நாதன் ஆகியோர் தமது சிறந்த நடிப்பால் சபையோரின் உள்ளத்தைக் கவர்ந்து சென்றனர். ஈற்றிலே செல்வர். சிங்கமாப்பாணரின் நன்றியுரையுடன் விழா இனிது முடிவுற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயிர் நடுகிறார் பிரதமர் சிறிமா பயிர் அழிக்கின்றனர் அதிகாரிகள்!

கடந்த 9-1-73 அன்று மாவட்ட காணி அதிகாரி தலைமையில் திட்டப்பொறுப் பதிகாரிகளும் பொலிசாரும் கொண்ட கோஷ்டியொன்று விசுவமடுக்குளம் படித்த வாலிபர் திட்டத்துக்கு அண்மையில் அரசாங்க காடுகளை அழித்து பயிர் செய்யும் வேறு காணிகள் இல்லாத ஏழை விவசாயிகளின் காணிகளுக்குச் சென்று வீடுகளை பிய்த்து எறிந்ததுடன் மிளகாய் நாற்று மேடைகளை கொத்தி எறிந்தனர்.

அன்று தொடங்கிய அட்டூழியங்கள் இன்றுவரை ஒழியவில்லை. 15ம், 16ம் திகதிகளில் மீண்டும் கொட்டில்களை கொத்தியதுடன், நாற்று மேடைகளை அழித்தும் வாழைகளை வெட்டி எறிந்தும் மிளகாய் செடிகளை பிடுங்கி எறிந்தும் நாசம் செய்துள்ளனர். விசுவமடுக்குளம் படித்த இளைஞர் திட்டத்தை சேர்ந்த பல விவசாயிகள் தங்கள் நாற்று மேடைகளை உயர்ந்த இடங்களில் உள்ள அரசாங்க காணிகளை அழித்து பயிர் செய்பவர்களின் காணிகளில் அமைத்திருந்தனர். இம் மேடைகள் யாவும் நாசம் செய்யப்பட்டுள்ளன.

கமத்தொழில் இலாகாவில் ரூபா 70/-தாக உள்ள 600 இருத்தல் மிளகாய் விதைகளில் இருந்து முளைத்த கன்றுகள் இதுவரை அழிக்கப்பட்டுள்ளன. ஒரு இருத்தலில் அரை ஏக்கர் படி 300 ஏக்கர் பயிர்ச்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது. மிளகாய் ரூபாய் 5 தாக விற்கப்பட்டாலே ஒரு ஏக்கர்வருமானம் ரூபா 15000 அழிக்கப்பட்ட விதையின் பெறுமதி ரூபா 42000 பாதிக்கப்பட்ட செய்கையின் ஆகக் குறைந்த பெறுமதி ரூபா 4,500000/-

நாற்று மேடைகளை கொத்திய திரு. வி. கனகராஜன், ராஜேஸ்வரன் ஆகியோர் மீது வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இது சம்பந்தமாக திரு. சி. சுந்தரலிங்கம் (மாஜி எம். பி.) அவர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார். 17-1-73 இல் திட்ட இளைஞர்கள் பிரமாண்ட மானதோர் கூட்டத்தை கூட்டி சில தீர்மானங்களை எடுத்து காணி ஆணையாளர், பிரதமர், காணிவிவசாய அமைச்சர் ஆகியோருக்கு அனுப்பியுள்ளனர்.

1. மாவட்ட காணி அதிகாரியால் நடத்தப்பட்ட காணிப்பங்கீடுகளை பற்றியதோர் பூரண விசாரணை நடத்த கமிஷன் ஒன்று அமைத்தல். இளைஞர்களின் பிரதிநிதிகளை விசாரணைக்கு அழைத்தல்.

2. அரசாங்க காணிகளை வெட்டியவர்களில் காணியற்ற ஏழைகளுக்கு மட்டும் 2 ஏக்கர் காணி வழங்கல்.

3. அதிக அளவு காணியை வைத்திருப்பவர்களின் காணிகளை சுவீகரித்து காணியற்றவர்களுக்கு வழங்கல்.

இது சம்பந்தமாக வவுனியா பா. உ. திரு செல்லத்தம்பு தேசிய பேரவையில் விரைவில் பிரச்சினை கிளப்பவுள்ளார்!

## அடிமை...

9-ம் பக்கத் தொடர்ச்சி

என்ன நடந்திருக்கும்? எண்ணிப்பார்?

குமாரசூரியர் வெறுந் துரோகியா? துரோகிகளுக்குள் துரோகி.

வேலணை மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற பாராட்டுவிழா சூழ்ச்சி செய்து பாராட்டுப் பெற ஒரு தருணத்தை உண்டாக்கி நடத்தப்பட்ட விழா? மறுக்கமுடியுமா?

அமைச்சர் குமாரசூரியர் வேறு எத்தனை பாடசாலையின் தரத்தை இன்றுவரை உயர்த்துமாறு கேட்டார்? ஒன்றையாகுதல் உயர்த்தியிருக்கிறாரா? உயர்த்தியதற்கு எங்கேனும் பாராட்டுவிழா நடத்தப்பட்டிருக்கிறதா?

பாடசாலைகளைத் தரமுயர்த்துவித்தற்கு இன்றுவரை சிகரங்கள் வைத்து இராவிருந்து கொடுத்து இவ்வாறு பாராட்டு யாருக்கேனும் நடத்தப்பட்டிருக்கிறதா?

இந்த விழாவுக்கும் தரமுயர்த்துதலுக்கும் ஓடி ஆடித் திரிந்ததற்கும் தரகர்களுக்கும் இரவு விருந்துக்கும் மேள தாளங்களுக்கும் ஏறக்குறைய நாலாயிரம் ரூபா செலவாகியிருக்கிறதே! இவ்வளவு பணத்தைச் செலவு செய்து பெயர்ப்பலகை ஒன்றை எழுதித் தூக்கியது தானே கண்ட மிச்சம்.

ஒரு பாராட்டு விழாவுக்கு நாலாயிரம் ரூபா செலவு செய்விப்பவர்கள் மக்களுக்குச் சேவை செய்பவர்களா? இப்படிச் செலவு செய்து பாராட்டு விழா நடத்தும் பொழுதுதான் இரவு நேரத்தில் மக்களின் கஷ்டநஷ்டங்களை அறியும் வாய்ப்பு உண்டாகுமா? துரோகக் கும்பலே துணிவிருந்தால் விடை தாருங்கள்.

---

காசி ஆனந்தன்
வண்ணை ஆனந்தன்
சிறையில் இன்று
**240-வது நாள்**

---

## பத்திரிகைச்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் சட்ட நீதிமன்றம் நிராகரிக்கும் ஒரு மசோதாவைக்கூட, மூன்றில் இரண்டுபங்கு பெரும்பான்மையைக்கொண்டு தேசியப் பேரவை நிறைவேற்றுவதற்கு. அரசியல் சட்டத்தில் இடம் இருக்கிறது.

எனவே எப்படியும் பத்திரிகைச்சபை மசோதாவை கொண்டுவந்து நிறைவேற்றவே அரசாங்கம் முயலும். பத்திரிகை சுதந்திரத்தைப் பறிப்பதே ஆட்சியாளர்களின் ஒரே நோக்கம்.

ஆகவே, நாட்டு மக்கள் அனைவரும் —அனைத்து அரசியற் கட்சிகளும்—பொதுமன்றங்களும் ஒன்று திரண்டு, ஒரே குரலில் பத்திரிகைச் சபை மசோதாவை முற்றுமுழுதாக கைவிடும்படி அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டும். கிளர்ச்சிசெய்ய வேண்டும். நெருக்கடியை தோற்றுவிக்க வேண்டும். அதுவே இன்றுசெய்யவேண்டிய வேலை.

பத்திரிகைசபை மசோதா முற்றாக கைவிடப்பட்டால் மட்டுமே இந்நாட்டு மக்கள்— சனநாயகவாதிகள்— ஆபத்து நீங்கியது என்று ஆறுதலடைய முடியும்.

## புள்ளிகளை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பத்திரிகையில் அறிக்கை விட்ட அமைச்சர் இம்முறை திறமையின் அடிப்படையில் தெரிவு நடைபெற்றதாகக் கூறி வானொலியில் அறிக்கை விடுகிறார்.

''பல்கலைக்கழகத்திற்கு தெரிவு சம்பந்தமான அழைப்புக்கள் மாணவர்களுக்குக் கிடைத்துள்ளன. அவ்வழைப்பு திறமை அடிப்படையிலேதான் விடப்பட்டதாக அரசு அறிக்கை கூறுகிறது. அதாவது மாணவர்களுக்குப் புள்ளிகள் தரம்பிரிக்கப்பட்டுக் கொடுத்தபோதும் (A, B, C, S, F என்றவாறு) புள்ளிகளின் கூட்டுத் தொகையைக் கொண்டே பல்கலைக்கழகத்திற்கு அழைப்பு விடுத்ததாக அது கூறுகிறது. வாதத்திற்காக அரசாங்கம் திறமையின் அடிப்படையில்தான் மாணவர்களுக்கு அழைப்பு விடுப்பதாக வைத்துக் கொள்வோம்.

''அப்படியாயின் அரசிடம் ஒரு கோரிக்கை:— மாணவர்களுக்குப் பரீட்சை முடிவுகளைத் தரம் பிரித்து அனுப்பாது புள்ளிகளையே நேரடியாக வழங்க வேண்டும். அப்பொழுதுதான் அரசாங்கம் திறமையடிப்படையில் தெரிவு செய்வதை நாம் சிறிய அளவிலாவது நம்பமுடியும்.

''இக்கோரிக்கையைத் தமிழர் கூட்டணி ஆராய்ந்து தேசிய பேரவையின் உள்ளேயும் வெளியேயும் குரல் எழுப்ப வேண்டும்''.

—இவ்வாறு மாணவர்கள் கேட்கிறார்கள்.

## தமிழ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களின் வரவு இடாப்புகள் கூட சிங்கள மொழியிலேயே பதிவு செய்யப்பட்டு வருகின்றன. பாடசாலை நிருவாக அலுவல்கள் யாவற்றுக்கும் இந்த மொழியே பயன்படுத்தப்பட்டு வருகிறது.

முற்றிலும் தமிழ் பிள்ளைகளைக்கொண்டே மேற்படி பாடசாலையில் தற்போது முதலாம் வகுப்புத்தொடக்கம் 4ம் வகுப்பு வரை சகல பாடங்களும் சிங்களத்தில் போதிக்கப்பட்டு வருகின்றன. ஐந்தாம் வகுப்பு தொடக்கம் 8ம் வகுப்பு வரை சிங்களம், பௌத்தம் ஆகியவை கட்டாய பாடங்களாகப்போதிக்கப்பட்டு வருகின்றன. ஆண்டுதோறும் ஒவ்வொரு வகுப்பாக சிங்களம் போதனு மொழியாக்கப்பட்டு வருவதால் இன்னும் 4 ஆண்டுகளில் சகல வகுப்புகளும் முற்றிலும் சிங்களமயமாக்கப்பட்டு விடும்.

இந்த ஆண்டு ஏழாம் வகுப்பிலிருந்து 8ம் வகுப்புக்கு உயர்த்தப்பட்ட பிள்ளைகள் யாவரும் அங்கிருந்து வெளியேறி வேறு தமிழ் பாடசாலைகளுக்குப்போய்விட்டதாகவும் இதனால் தற்போது 7ம் வகுப்பு வரையே நடைபெற்று வருவதாகவும் அறியப்படுகிறது.

தற்போது பிக்கு ஒருவர் உட்பட 4 சிங்கள ஆசிரியர்களும் 3 தமிழ் ஆசிரியர்களும் அங்கு கடமையாற்றி வருகின்றனர். காலக்கிரமத்தில் தமிழாசிரியர்களின் தேவை அங்கு ஏற்படாமல் போய்விடும். பாடசாலை ஸ்தாபிக்கப்பட்டகாலத்தில் அங்கு கடமையாற்றிய தமிழாசிரியர்கள் யாவரும் இடமாற்றம் செய்யப்பட்டுவிட்டனர்.

## ஆளுங்கட்சி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் சமசமாஜ—சுதந்திரக் கட்சிகளுக்கிடையே கடுமையான பலப் பரீட்சையும் போதலும் ஏற்பட்டுள்ளது. சபாநாயகர் மீது நம்பிக்கையில்லாப்பிரேரணை கொண்டுவருவதா இல்லையா என்ற பிரச்சினை இப்போது சமசமாஜிகளுக்கும் சுதந்திரக்கட்சிக்கும்—பிரதமருக்கும் நிதியமைச்சருக்கும்— இடையேயுள்ள கௌரவப் பிரச்சினையாகிவிட்டது.

இப்பிரச்சினை மீது தற்காலிகமான இணக்கம் இருபகுதியினருக்குமிடையேசில வேளைகளில் ஏற்பட்டாலும்கூட —இருகட்சிகளுக்கு மிடையே வேர்விட்ட பிளவு வளர்ந்து முற்றி ஐக்கிய முன்னணி அரசை உடைப்பது உறுதியென்று அரசியல் நோக்கர்கள் கூறுகின்றனர்.

## திருநெல்வேலியிலும் சிங்களக் குடியேற்றம்?

யாழ். திருநெல்வேலியில் தனியாருக்குச் சொந்தமான 35 ஏக்கர் நிலத்தை அரசு சுவீகரித்து யாழ் நகரில் வதியும் காணியற்ற மக்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறதாம். ஆனால் சுவீகரிக்கப்படும் காணி உண்மையில் சிங்களவருக்கே வழங்கப்படுமாம்.

# தமிழர்களைப் பௌத்தர்களாக்கும் முயற்சிக்கு 'தினகரன்' உதவிசெய்கிறதா?

## துடிப்பு மிக்க தமிழ் இளைஞர்கள் இப்படிக் கேட்கிறார்கள்

''இலங்கையில் வாழும், பரம்பரை பரம்பரையான தமிழ் இளைஞர்களை பௌத்தர்களாக்கும் முயற்சிக்கு, அரசினருக்குப் பயந்து ஒடுங்கி இருக்கும் ஏரிக்கரை நிறுவனத்தில் இருந்து வெளிவரும் 'தினகரன்' மும்முரமாக ஈடுபட்டு வருகிறதா? சுயநல விளம்பரத்திற்காக திடீரென அமைக்கப்பட்டிருக்கும் ''திராவிடர்களை — பௌத்தர்களாக மாற்றும் சங்கமான'' திராவிட — பௌத்த கலாசார மன்றம் ''மேற்கொண்டுவரும் நாசகார செயல்களுக்கு, ஆதரவு கொடுக்கும் வகையில் இந்தத் திடீர் மன்றத்தின் பிரசாரச் செய்திகளை பெரிதுபடுத்தி வெளியிட்டு வருகிறது தினகரன். தமிழர்களிடம் இருந்து பணத்தைப் பெற்றுப் பத்திரிகை நடாத்தி, அதனால் வயிறு வளர்த்து வரும் 'தினகரன்' தமிழினத்தைக் கூண்டோடு அழித்தொழிக்கும் முயற்சியில் ஈடுபட்டுவருவது, தமிழ் இளைஞர்களாகிய எம்மை மிகவும் வேதனையும், வெட்கமும் அடையச்செய்கிறது.''

இவ்வாறு கடந்த பொங்கல் தினத்தன்று, கொழும்பு 'ரொஸ்மிட் பிளேஸி'ல் திராவிட — பௌத்த கலாசார (திடீர்) மன்றத்தின் சார்பில் அமைக்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்படும் 'சித்தார்த்த இராப் பாடசாலையில் நடைபெற்[illegible] ளுவர் விழாவை பார்[illegible] சென்றிருந்த உணர்ச்சிமிக்க தமிழ் இளைஞர்கள் பலர் 'சுதந்திரன்' கொழும்பு நிருபரிடம் கூறினார்கள்.

இலங்கைத் தி.மு.க. என்ற போர்வையில் சுயநல விளம்பரம் தேடமுயன்ற சிலர், தமது கபடநாடகம் தமிழ் மக்கள் மத்தியில் எடுபடவில்லை என்பதால், முகமூடி கழன்ற இவர்கள், திடீரென திராவிட—பௌத்தமன்றம் என்ற போர்வையில் பத்திரிகைகளில் அறிக்கைவிட்டு தமது பெயர்களை பிரபல்யம் படுத்துவதில் இப்போதும் மூரமாக ஈடுபட்டுவருகிறார்கள். இப்படியான சுயநல விளம்பரத்திற்காக — தமிழ் மக்களின் பொதுப் பணத்தைப் பெற்று வயிறு வளர்த்து வரும் ஏரிக்கரை ஏடான தினகரன் பலியாவதா? இப்படி அந்த இளைஞர்கள் கேட்கிறார்கள்.

இந்த நடவடிக்கைகளுக்கு முன்னோடியாக தினகரன் பத்திரிகையில் 'இரவு ஆசிரியர்களில்' ஒருவர் முழுமூச்சாக ஈடுபட்டு வருவதாக தமக்குத் தெரியவந்துள்ளதாகக் கூறிய அந்த இளைஞர்கள் குறிப்பிட்ட ஆசிரியரின் பெயரை முழுமையாக வெளியிட மறுத்து விட்டனர் டி. எஸ். டி. என்ற குறுகிய பெயரையுடைய இந்த ஆசிரியர். பொங்கல் தினத்தன்று திராவிட பௌத்த திடீர் மன்றத்தினரால் நடாத்தப்பட்ட பொங்கல் விழாவில் முழுப்பொறுப்பாக கடமை புரிந்ததைத் தாம் நேரில் கண்[illegible] திடீர் மன்றம் அமைவதற்கு இந்த உதவி ஆசிரியரும் முக்கிய கர்த்தாக்களில் ஒருவர் என்றும், தமக்குத் தெரியவந்துள்ளதாகவும் அந்த இளைஞர்கள். இப்படிப்பட்ட நாசகாரச் செயல்களைகுறிப்பாக தமிழ் மக்களை பௌத்தர்களாக மாற்றும் முயற்சிக்கு ஆதரவாக எந்தத்தினசரியாவது செய்திகள் வெளியிடுமானால் அந்தப் பத்திரிகையினை தமிழர்கள் பகிஷ்கரிக்க வேண்டுகோள் பிரசாரங்களை மேற்கொள்ள தாம் எதுவித அச்சமும் இன்றி முன்னிற்பார்கள் என அந்த இளைஞர்கள் மேலுந் தெரிவித்தனர்.

மேல் குறிப்பிட்ட உதவி ஆசிரியர், மற்றும் திராவிட பௌத்த (திடீர்) மன்ற நிர்வாகிகள் அனைவரினதும் தனிப்பட்ட தகவல்கள் தமக்குத் தெரியுமென்றும், மேற்கொண்டு இப்படிப்பட்ட நாசகார செயல்களில் அவர்கள் தொடர்ந்து ஈடுபடுவார்களானால் அவர்களின் முகமூடிகள் கிழித்தெறியப்படும் என்றும் அவர்களின் கபட நாடகத்தை, தமிழ் மக்கள் மத்தியில் அம்பலப்படுத்துவதென்றும் அந்த துடிப்புமிக்க தமிழ் இளைஞர்கள் கொதிப்போடு கூறினார்கள்.

நல்வழி

''சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால் நீதி வழுவா நெறி முறையின்—மேதினியில் இட்டார் பெரியோ ரிடாதார் ரிழிகுலத்தோர் பட்டாங்கி லுள்ள படி.

ஔவையார்

15 மில்க்வைற் நிலசோப் மேலுறைகளை அனுப்பி உரையுடன் கூடிய நல்வழி என்ற புத்தகத்தையும், கல்லூரி நேர அட்டவணையையும், கலண்டரையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

**மில்க் வைற் சோப் தொழிற்சாலை**
**த. பெ. இல. — 77, யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டப்பர் சுற்றுலா—ஒரு விமர்சனம்:

# உரிமை கேட்கும் தமிழினத்திற்கு உப தபால் நிலையமா தேவை?

இந்நாட்டுத் தமிழ் மக்களின் வாக்குகளைப்பெற்று நேர்வழியில் தேசியப்பேரவைக்கு செல்லும் திராணியின்றி — பத்தாண்டுகளாக சேலைத்தலைப்பைநக்கி அதன் மூலம் புறக்கதவால் 'திடீர்' அமைச்சராகி—இந்நாட்டுத் தமிழ்த்தேசிய இனத்தின் உரிமைகளையும் சுதந்திரத்தையும் விலை கூறி விற்று — சிங்கள ஏகாதிபத்தியத்தின் கங்காணியாகவும் தமிழ்மக்களின் தலைமை எட்டப்பராகவும் இன்று விளங்கிவரும் சிறுமை மிக்கவர் செல்லையா குமார சூரிய(ர்)!

தமிழினத்தின் அரசியல் உரிமைகளை கபளீகரம் செய்து, 'இனக்கொலை' புரிந்து வரும் சிங்கள ஆட்சியாளரின் கையாளாக இவர் விளங்குவது மட்டுமன்றி— தமிழ் பிரதேசத்திலிருந்து தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களை புறக்கணித்து, தமிழ் மக்களால் கட்டுப் பணமும் பறிக்கப்பட்டு, பொதுத்தேர்தலில் துரத்தியடிக்கப்பட்ட துரோகிகளையும், கயவர்களையும் தனது கையாட்களாகக்கொண்டு, தமிழ்ப் பகுதியில் தமிழினத்தின் விடுதலை இயக்கமாக விளங்கும் தமிழரசுக்கட்சியை தமிழர் கூட்டணியை அழித்தொழிக்கச்சபதமெடுத்து— சின்னத்தனமான செயல்களில் ஈடுபட்டு வருபவர் செல்லையா குமாரசூரிய(ர்)-

இவ்வளவு 'பெருமை'க்கும் உரிய குமாரசூரிய(ர்) அண்மையில் வடபகுதிக்கு சென்று மூன்று நிகழ்ச்சிகளில் தமது கையாட்கள் சகிதம் கலந்துகொண்டுவிட்டு—கறுப்புத் துணிகளால் முகத்தை மூடிக்கொண்டு கொழும்பு திரும்பியிருக்கிறார்.

ஆமாம் — தமிழினத்தின் உரிமைகளையும், சுதந்திரத்தையும் மட்டுமன்றி குடியாட்சிப் பண்புகளையும் 'கொலை' செய்து வரும் குமாரசூரிய(ர்) புதிய பெருமையை — சாதனையொன்றையும் நிலைநாட்டி விட்டுத் திரும்பியிருக்கிறார்! அதுதான், தமிழ் மக்களால் கறுப்புக்கொடி பிடிக்கப்பட்டு, 'திரும்பிப்போ' என்று விரட்டியடிக்கப்பட்ட முதலாவது, தமிழ் அமைச்சர் என்ற 'பெருமை'!

ஆம், 1963ம் ஆண்டுக்குப் பின்—இப்போதுதான் மீண்டும், தமிழ்ப்பகுதிக்கு வரும் அமைச்சர்களுக்கு கறுப்புக் கொடி காட்டி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்துவதென்று தமிழ் மக்கள் தீர்மானித்திருக்கிறார்கள்— தமிழ் மக்களின் தீர்ப்பை தமிழர் கூட்டணி செயல்படுத்துவதென்றும் முடிவு செய்து விட்டது!

இத்தகைய முடிவெடுத்த நேரத்தில்தான், 'திடீர்' அமைச்சர் செல்லையா குமாரசூரிய(ர்)வும் தலைக்கனம் கொண்டு, தமிழ்ப்பகுதிக்கு விஜயம் செய்து, கறுப்புக்கொடி எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்துக்கு ஆளான முதலாவது ஐக்கிய முன்னணி அரசின் அமைச்சர் என்ற வரலாற்றுச் சிறுமையை தேடிக்கொண்டு விட்டார்.

எனவே குமாரசூரியவின் வரலாற்றுக் கறை படிந்த வடபகுதி விஜயத்தையும் அங்கு அவரும் அவரது தொண்டரடிப்பொடி யாழ்வார்களும் ஆடிய திருக்கூத்துக்களையும் பற்றி ஒரு விமர்சனம் அவசியமல்லவா?

குமாரசூரியா 15-1-73ல் யாழ்ப்பாணத்துக்கு சென்றார். ஆனால் அவர் செல்வதற்கு இரண்டு வாரங்கட்கு முன்னரேயே அவரது எடுபிடிகளான பொலீசார் வடபகுதியில் உள்ள பல இளைஞர்களை — குறிப்பாக தீவுப் பகுதியிலுள்ள துடிப்புள்ள தமிழ் இளைஞர்களை வேட்டையாடத்தொடங்கி விட்டார்கள். குமாரசூரியருக்கு எதிராக கறுப்புக்கொடி காட்டப்போகிறீர்களா என்று பல இளைஞர்களை பொலீசார் பிடித்து பயமுறுத்தியிருக்கின்றனர்: வெருட்டியிருக்கின்றனர். இரகசிய பொலீசாரும், பொலீசாரும் பல இடங்களில் உள்ள இளைஞர்களை மோப்பம் பிடித்து அச்சுறுத்தியிருக்கின்றனர். இப்படியெல்லாம் முன் கூட்டியே 'பாதுகாப்பு' நடவடிக்கைகள் மேற்கொண்டு — பந்தோபஸ்து செய்துகொண்டு தான் பலாலி விமான நிலையத்தில் வந்திறங்குகிறார் செல்லையா குமாரசூரியா.

## வாடுகிறார் நாட்டு மக்கள் பட்டினியால்! கேளிக்கை விழா, சூரியருக்கு வடக்கே!

ஆமாம் — தாமும் ஒரு தமிழராய் — சுழிபுரத்தில் பிறந்தவராம் — இப்படியெல்லாம் கூறிச் சவடால் அடிக்கும் குமாரசூரியருக்கு தமிழ் மக்கள் மத்தியில் சுதந்திரயாக—சுயேச்சையாக— நடமாட நெஞ்சில் துணிவில்லை; காக்கிச் சட்டைகளின் கைதியாகவே பலாலியில் வந்து இறங்குகிறார் குமார சூரியா.

ஏன் வருகிறார் இவர்?

நயினாதீவில் தரமுயர்த்தப்பட்ட ஒரு தபால் நிலையம்— சங்குவேலியில் ஒரு உப தபால் நிலையம்— இவற்றைத் திறந்துவைக்க! வேலணையில் காவலூர் பா. உ. பண்டிதர் இரத்தினத்தின் முயற்சியினால் தரமுயர்த்தப்பட்ட மகாவித்தியாலயத்தின் பெயரைப் பயன்படுத்தி — தமது கையாட்களைக் கொண்டு பாராட்டுப்பெற!

இவற்றுக்கு ஓர் அமைச்சர் தான் வரவேண்டுமா? நாட்டில் அத்தியாவசிய உணவுப் பொருட்களெல்லாம் விலை ஏறி வாழமுடியாமல் வாடுகிறார்கள் மக்கள் — பட்டினியால் சாகின்றனர் ஏழைகள். இந்த நேரத்தில் வடக்கே தமாஷாக்களையும், வரவேற்புக்களையும் தபாலமைச்சர் தமக்குத் தாமே நடத்திக் கொண்டிருக்க வேண்டுமா? அரசாங்கத்துக்கு மக்கள் செலுத்தும் வரிப்பணம் அமைச்சர்களின் தமாஷாக்களுக்கும் சுற்றுலாக்களுக்கும் தான் அநியாயமாக கொட்டப்பட வேண்டுமா?

நயினாதீவு தபால் நிலையத்தையும் — சங்குவேலி உப தபால் நிலையத்தையும் திறந்து வைப்பதற்கு யாழ் மாவட்ட தபால் அத்தியட்சகர் போதாதா? இதற்கு கொழும்பிலிருந்து செல்லையா குமாரசூரியாதான் போக வேண்டுமா?

குமாரசூரியரும் அவரது துரோகக் கும்பலும் தமிழ்ப்பகுதியில் உபதபால் நிலையம், தரமுயர்வு — போன்ற சில்லறை விளையாட்டுக்களை காட்டி தமிழ் மக்களை விடுதலைப் பாதையிலிருந்து — உரிமைக் கோரிக்கையிலிருந்து — திசைதிருப்ப முயற்சிக்கின்றனர்! அதற்காகவே அரசாங்க செலவில் இத்தகைய கூத்துக்களை காட்ட முயலுகின்றனர்.

மொழி, இன, குடி உரிமைகளை — சுதந்திரத்தை இழந்து — தமிழினம் இந்நாட்டில் துடிக்கிறது. விடுதலைக்குப் போராட ஓர் அணியில் — தமிழர் கூட்டணியில் ஒன்று திரண்டு நிற்கிறது. தமிழர் கூட்டணியிலிருந்து தமிழ் மக்களை திசை திருப்பி, சிங்கள ஏகாதிபத்தியச் சேற்றுள் — அடிமைச் சேற்றுள் — அவர்களைச் சிக்க வைக்கவே குமார சூரியா கும்பல் திட்டம் போட்டு சூழ்ச்சி செய்து வருகிறது!

உபதபால் நிலையங்களையும் மதகுகளையும் பாலங்களையும் — இதுபோன்ற சில்லறை சலுகைகளையும் — தமிழர்கள் இன்று கேட்கவில்லை. தங்கள் கண்ணினுமினிய சுதந்திரத்தை — தமிழ் மொழியின் உரிமைகளைத்தான் கேட்டு போராடி வருகிறார்கள்! இறால் போட்டு சுறா பிடிப்பது போல — உபதபால் நிலையங்களையும் பாலங்களையும் கொடுத்து — தமிழ் மக்களை சுதந்திரப் பாதையிலிருந்து பிரிக்கவே துரோக சூரியரின் அரசாங்கம் சதி செய்து வருகிறது. இதற்காகவே தமிழ் இலங்கைக்கு, அமைச்சர்கள் அடிக்கடி விஜயம் செய்து இனிக்க இனிக்கப் பேசி வருகிறார்கள்.

வீரவியட்னாமில், மக்கள் தங்கள் சுதந்திரத்தைப் பெற — ஏற்கெனவே இருந்து வந்த பாலங்களையும், பள்ளிக்கூடங்களையும் ஆஸ்பத்திரிகளையும் கூட பலி கொடுத்து வருகிறார்கள். அப்படியிருக்கும்போது — உப தபால் நிலையங்களுக்காக ஈழத் தமிழினம் மட்டும் சுதந்திரக் கோரிக்கையை கைவிடுமா? ஒரு போதுமே கைவிடாது என்பதை தப்புக் கணக்குப்போடும் செல்லையா குமாரசூரியா உணர வேண்டும்!

செல்லையா குமாரசூரியா யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையத்தில் வந்திறங்கிய போது — பெருந்திரளான' மக்கள் கூடிநின்று வரவேற்றார்கள் என்று குமாரசூரியாவின் கால் கழுவி கதிமோட்சம் காணும் தினபதியும், தினகரனும் எழுதி 'டுப்' அடித்திருக்கின்

## குமாரசூரியருக்கு மாலையிட்டவர்களில் கூலிக்கு மாரடிப்போர்-சுயநலத்துக்காக பல்லிளிப்போர் எத்தனை எத்தனை பேர்?

றன. அப்படி எழுதாவிட்டால் அமைச்சர் கோபிப்பாரே!

அதிலும் தினகரனே — அமைச்சருக்கு அஞ்சி நடுங்கி —ஈனத்தனமாக — வேலணையில் கறுப்புக் கொடி காட்டிய செய்திக்கு போதிய முக்கியத்துவம் கொடுக்காமல் இருட்டடிப்பு செய்துவிட்டது!

தினபதியோ முந்திரிக் கொட்டைபோல முந்திக் கொண்டு — பலாலி விமான நிலையத்தில் காட்டப்படாததால் கறுப்புக் கொடி இயக்கமே பிசுபிசுத்து விட்டதாக செய்தி வெளியிட்டு, தனது தலையில் தானே குட்டிக் கொண்டது!

இத்தனை..., மக்களைப் புறக்கணித்து - மக்களின் உணர்ச்சிகளைப் புறக்கணித்து-மந்திரிக்கு எதையெல்லாமோ கழுவி - தங்கள் ஈனத்தனத்தை காட்டிவருகின்றன.

குமாரசூரியா வந்திறங்கியபோது பலாலி விமான நிலையத்தில் — நீலக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தனவாம்! நீலக்கொடிகள் எதைக் காட்டுகின்றன தெரியுமா?

விஷம்தான் நீலநிறம்! விஷம்குடித்தவர்கள் நீலநிறமாகிவிடுவார்கள்! இறந்தும் விடுவார்கள்! சிங்கள ஏகாதிபத்தியம் என்ற விஷத்தைக் குடித்து — தமிழினம் தனது தனித்துவத்தை இழந்து இறந்துபோகவேண்டும் என்பது தமிழ்ப் பகுதியில் நீலக்கொடி பிடிப்போரின் உள்ளாந்தர நோக்கம்!

குமாரசூரியாவுக்கு 'கியூ' வரிசையில் நின்று 'மக்கள்' மாலையிட்டதாக படம்பிடித்துப் போட்டு, அமைச்சரை மகிழ வைத்திருக்கிறது தினபதி. குமாரசூரியருக்கு கியூ வரிசையில் நின்று மாலை போட்டவர்களில் கூலிக்கு அமர்த்தப்பட்டவர்கள் எத்தனைபேர்? சமாதான நீதவான் பதவிக்காக பல்லை இளித்துக் கிடப்பவர்கள் எத்தனை பேர்? கூட்டுறவு இயக்குனர் சபை பதவிக்காக — நல்லிணக்க சபைகளில் உறுப்பினர் பதவிக்காக—இடமாற்றத்துக்காக- இன்னும் இதுபோன்ற அற்ப சலுகைகளுக்காக காத்துக் கிடப்பவர்கள் — தவமிருப்பவர்கள் எத்தனை பேர்?

சுத்த சுயநலத்துக்காகவும்- கூலிக்காகவும் அமர்த்தப்பட்ட ஒரு சிலர் — அதுவும் தங்கள் சொந்தச் செலவின்றி ஓசியில் கிடைத்த மாலையை—அமைச்சருக்கு சூட்டினார்கள் என்றால், அதை வைத்துக்கொண்டு 'பொது மக்கள்' வரவேற்றதாக நாளேடுகள் புழுகித்தள்ளுவதன்மூலம் அமைச்சரது 'கடைக்கண்' பார்வை அந்த ஏடுகளின் ஆசிரியர்களுக்கும், நிருபர்களுக்கும் கிடைக்கலாம். ஆனால் பொதுமக்கள் அந்த ஏடுகள் மீது காறியுமிழ்ந்து வருகிறார்கள்!

குமாரசூரியா கும்பல் 'பொடியன்' விநோதனுடன் சங்குவேலியில் ஆடிய விசர் ஆட்டத்தைப் பற்றி அடுத்த வாரம் அலசுவோம்—

—எஸ். ஆர். எம்.

# துரோக சூரியா வராதே...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கொடியோடு நின்றவுடன் அமைச்சருக்கு மாலையிடுதற்கு வைக்கப்பட்டிருந்த மேசை நிறைகுடம் முதலியன யாவற்றையும் வைத்தவர்கள் ஏமாற்றத்துடன் தூக்கிச் சென்றனர்.

நேரஞ் செல்லச் செல்ல இளைஞர்களுடன் ஊர்மக்களும் சேர்ந்து கொண்டதால் கூட்டம் பெருகத் தொடங்கிற்று; முன்னணியும் நீளத் தொடங்கிற்று.

### சதித்திட்டமும் கைகொடுக்கவில்லை

இருண்டபின் போவோம். அப்படிப் போனால் கறுத்தக் கொடிகளைக் காணவில்லை என்றுகூறுதல் சொல்லலாம் என்றெண்ணிப் போலும் இடையில் புங்குடு தீவிலும் மின்சாரத் திட்டத்தைத் தொடக்கி வைக்கும் கைங்கரியத்திலும் அமைச்சர் ஈடுபட்டார். இந்த நிகழ்ச்சி இருண்டபின் கூட்டத்துக்கு வருதற்காக இரண்டொரு நாளில் ஒழுங்கு செய்யப்பட்டது. எனினும் நிலவும் பொலிசார் ஒழுங்கு செய்த கார்களின் வெளிச்சமும் அவர்கள் செய்த சூழ்ச்சித் திட்டத்தைப் பலிக்காமல் செய்துவிட்டது.

ஏறக்குறைய ஏழு மணியளவில் பத்திரிகைப் பிரதிநிதிகள் அமைச்சருடன் கூடிச் சென்றவர்கள் வந்து சேர்ந்தார்கள். எல்லோரும் ஆர்ப்பாட்ட அணியைப் படம் எடுத்தனர். சில நிமிடங்களில் அமைச்சர் பரிவாரங்களுடன் வந்தார். ஆர்ப்பாட்டம் தொடங்கிற்று! 'துரோகி சூரியரே திரும்பிப் போ' என்ற - கோஷம் வானைப் பிளந்தது. நூற்றுக் கணக்கான கறுப்புக் கொடிகள் காட்டப்பட்டன. அமைச்சர் வந்த வான் எவ்வளவு விரைவாகச் செல்லலாமோ அவ்வளவு விரைவாக ஓடிற்று.

### வீர ஊர்வலம்

கறுத்தக் கொடி ஆர்ப்பாட்டத்தை வெற்றிகரமாக நடத்திய இளைஞர்களும் தலைவர்களும் ஊர்மக்களுடன் சேர்ந்து புங்குடுதீவு-வேலணைப் பகிரங்க வீதியில் ஊர்வலமாக பலவகைக் கோஷங்களை எழுப்பிக் கொண்டு காவலூர் பா. உ. வின் வீட்டை அடைந்தனர்.

ஊர்வலமாக அழைத்துச் செல்ல இருந்த அமைச்சர் வானில் ஓடினார். பொலிசு அனுமதியின்றி மக்கள் வெற்றி ஊர்வலத்தை நடத்தினர்.

அங்கு காவலூர் பா. உ. திருவாளர்கள் அ. அமிர்தலிங்கம், மு. சிவசிதம்பரம், வீ. ஆனந்தசங்கரி பா. உ. க. துரைரத்தினம் பா. உ. முதலானோர் உரை நிகழ்த்தினர். அமைச்சரின் பாராட்டுக் கூட்டத்துக்குச் சமூகமளித்தோரிலும் இரு மடங்குக்கு மேற்பட்டோர் இக் கூட்டத்தில் பங்கு கொண்டனர் என இரண்டு கூட்டத்தையும் பார்த்த பத்திரிகை நிருபர்கள்கூறினார்கள்.

---

### ஜனநாயகத்தைப் பாதுகாத்தார் சபாநாயகர்

இந்த நாட்டில் ஜனநாயகத்தைப் பாதுகாத்துவிட்டார் என்று சபாநாயகர் திரு. ஸ்டான்லி திலகரத்தினவுக்கு தமிழர்கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

மக்களின் நம்பிக்கையை அவர் தமது நியாயமான தீர்ப்பின்மூலம்வலுப்படுத்தியுள்ளதாக திரு. அமிர்தலிங்கம் மேலும் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிமை குமாரசூரியரை ஆறுமுகநாவலராம்!

## காக்கை வன்னியன் கதிரவேலு பிதற்றல்!

### துரோகிகளின் கேளிக்கைச் செலவு நாலாயிரம்!!

தீவுத் தொகுதிச் சிறீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் (புங்குடுதீவு) செலவுக்குக் காசு கேட்கும் வி. கதிரவேலுவுக்கு வேலணை மகாவித்தியாலயத்தில் திட்டமிட்டுச் சூழ்ச்சிசெய்து அமைச்சர் குமாரசூரியருக்கு நடத்திய பாராட்டு விழாவில் பைத்தியம் முற்றிவிட்டது.

யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலுமிருந்து அங்கு வந்து கூடிய துரோகிகளை ஒன்ருகக் கண்டவுடன்— மானத்தை மொழியை— இனத்தை விற்று வயிறு வளர்க்கும் கயவர் கும்பலைப் பார்த்தவுடன் — உபதாலதிபர் பதவிகளுக்கும் கூட்டுறவு இயக்குநர் பதவிகளுக்கும்—சமாதான நீதவான் பட்டத்துக்கும் — நல்லிணக்கச் சபைத் தலைவர் பதவிகளுக்கும் அமைச்சர் குமாரசூரியரைத் தலையில் சுமக்கும் சண்டாளர் கூட்டத்தை ஒன்ருகச் சந்தித்தவுடன் சேர்ந்திருந்த கட்சியை விட்டு வயிற்றுப் பிழைப்புக்கு எதிர்க்கட்சியிடம் சரண்புகுந்து அந்தக் கட்சியைத் திட்டிய வாயால் புகழ்ந்து உரைக்கும் உலுத்தர்களை—தான் நின்ற கட்சியைத் திட்டிப் புது எசமானைப் பூரிக்கச் செய்யும் புல்லுருவிகளை — தன் இனத்தைக் காட்டிக்கொடுக்கும் கோடரிக் காம்புகளை—தமிழ் இனத்தின் தன்மானத்தை— பிறப்புரிமைகளை — பரம்பரைப் பண்புகளை விலைகூறி விற்று மாற்றுனை மகிழ்விக்கும் எட்டப்பர்கூட்டம் முழுவதையும் ஒன்ருக ஓரிடத்தில் தரிசித்தவுடன் திரு. கதிரவேலுவுக்கு தலைகால் தெரியாத குஷி பிறந்தது. இதனுல் மானங்கெட்டுச் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்குத் தரகு வேலைசெய்யும் அவர், மதிகெட்டு உளறிக் கொட்டினுர். பாவம் தன் வாயாலேயே தம்முடைய கயமைக் குணத்தையும் பேதமையையும் அறியாமையையும் காட்டிக் குமாரசூரியரிடம் 'சபாஷ்' பெற்ருர்.

#### பைத்திய நாடகம்

"அந்நியர் ஆட்சியில் தமிழையும் சைவத்தையும் காப்பதற்கென ஆறுமுகநாவலர் அன்று தோன்றினர். அவர் போன்ற ஒரு பெருமகன் நம் மத்தியில் இன்று தோன்றியிருக்கிருர். அவரே திரு. செல்லையா குமாரசூரியர்" என்று செலவுக்குக் காசு கேட்கும் வி. கதிரவேலு பிதற்றியிருக்கிருர். அங்கொடைக்குப் போகவேண்டியவர் வேலணை மகாவித்தியாலயத்துக்கு வந்துவிட்டாரா?

வேலணை கிழக்கு மகாவித்தியாலயம் குமாரசூரியருக்குப் பாராட்டுப் பண்டமாற்றுச் செய்தபோது யாழ்ப்பாணத்தின் அங்கொடையாகத்தான் அதுகாட்சியளித்தது. அளவுக்குமிஞ்சிய ஆர்வத்தாலும் — பற்றினுலும் பைத்தியம் பிடிக்கும் என்பார்கள். சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கு அடிமையாகினதால் அடிமைத்தனம் முற்றிப் பைத்தியம் பிடித்த அமைச்சரும் அவருடைய தரகர்களும் 'காசு கேட்கும்' தலைமைத் தரகர் கதிரவேலுவுமே அன்று அங்கு பாராட்டென்று ஒரு பைத்திய நாடகம் ஆடினர். இந்தப் பைத்திய நாடகத்தில் தரகர் தலைவர் காசு கேட்கும் கதிரவேலுவின் பிதற்றல்களில் முழுப்பைத்திய உளறலே சிங்கள அடிமை செல்லையா குமாரசூரியரை "ஆறுமுகநாவலர் போன்ற ஒரு பெருமகான்" என்று அவர் கூறியது.

துரோகிகளின் தரகுத் துரோகி காசு கேட்கும் கதிரவேலு "அமைச்சர் குமாரசூரியரைச் சிலர் துரோகி என்கிருர்கள்" என்றுஇரங்கி விட்டு யார் துரோகி என்று ஓர் வினுவும் எழுப்பினுர்.

சிங்கள அடிமை எட்டப்பர் கூட்டத் தலைமைக் கங்காணி அமைச்சர் குமாரசூரியரை ஆறுமுகநாவலர் போன்ற பெருமகான் என்று பிதற்றிய கதிரவேலுவே உன்னைத் துரோகி என்றுகூற உனது இந்த உளறல் ஒன்று போதுமே!

காசு கேட்கும் கதிரவேலுவே ஆறுமுக நாவலரை உனக்குத் தெரியுமா? அவருடைய பெயரைச் சொல்லுதற்கு ஆளும் சிங்களக் கட்சிக்கு ஆசைகாட்டி ஆள் பிடித்துத் துரோகிகளைப் பெருக்கும் உனக்கு ஆறுமுக நாவலரின் பெயரைச் சொல்ல அருகதையுண்டா? பத்தினியைப் பரத்தையுடனும், தூயவரைத் துரோகியுடனும், அருங்குணத் தலைவனை அற்பகுணம்படைத்தவனுடனும் ஆண்டவனை அடிமையுடனும் சிவனருளில் திளைத்தவரைச் சிங்களவரின் தயவில் சீவிக்கும் சின்னப்புத்திக்காரனுடனும் ஒப்பிடுகிறவனை மடையன் என்றும் கூறமுடியாது. பைத்தியக்காரன் என்று தானே கூறலாம். ஆளுங் கட்சி மீது கொண்ட பைத்தியம் முற்றி நீ பிதற்றியிருக்கிருய்! உன் மானத்தை மரியாதையை மட்டுமா உன் தந்தை பசுபதிப்பிள்ளையின் பேரையும் கெடுக்கிருயே!

இன்று ஆறுமுகநாவலர் இருந்திருந்தால் என்ன செய்வார்? நாங்கள் இப்பொழுது கற்பித்துக் கூறவில்லை. சென்ற மாதம் வெளியிடப்பட்ட அமைச்சர் குமாரசூரியருக்கு ஆலவட்டம் வீசும் அடிமைகள் சிலரைக் கொண்ட நாவலர் சபை வெளியிட்ட நாவலர் நினைவு மலரைப் புரட்டிப் பார்! தமிழ் அறிந்த — பண்பாடுமிக்க — முதுபெருந் தலைவர் என்ன கூறுகிருர்?

"நாவலர் இன்றிருந்தால் பௌத்தத்தினின்று சைவத்தையும் சிங்களத்தினின்று தமிழையும் மீட்டுப்பாதுகாப்பதற்குப் பொங்கி எழாது வாளா இருப்பரோ?" என்று அவர் கூறியதைப் படித்தாயா துரோகி கதிரவேலுவே!

உன்னுடைய போலி நாவலர் ஆளுங்கசித் தரகர் அமைச்சர் குமாரசூரியர் பொங்கி எழுகிருரா? பொங்கி எழுகிறவர்களை எதிர்த்து மடக்கச் சூழ்ச்சி செய்கிருரா? அந்தச் சூழ்ச்சிக்கு உன்னைப் போன்ற துரோகிகளைப் பயன்படுத்துகிருரே! சைவத்தைஒடுக்கித் தமிழை அழிக்கும் பௌத்த சிங்கள சர்வாதிகார ஆட்சியின் நல்லடிமையாகி அந்த ஆட்சிகு தமிழ்ப் பகுதியில் பிரசாரஞ்செய்து ஆள்பிடிக்கும் அமைச்சர் குமாரசூரியரை ஆறுமுகநாவலர் என்கிருயே! இதை உலகம் பொறுக்குமா? வேறிடங்களில் — வேறுநாடுகளில் இப்படிச் சொன்ன ஒருவருக்கு

(7ம் பக்கம் பார்க்க)

#### துறை மந்திரி குமாரசூரியர்!

"குறைகள் இருந்தால் தான் மனிதனுக வாழ முடியும். இதுதான் கடவுளின் நியதி"

—— குமாரசூரியர் நயினுதீவில் பேசியது. (தினகரன் 17. 1. 73)

இனிய தமிழ் இனமே!
உன்மொழி பறிபோய் விட்டது! மானம் பறி போய் விட்டது என் றெல்லாம் புலம்பாதே!

குறைகள் இருந்தால் தான மனிதனுக வாழ முடியும். கடவுளின் நியதி தமிழ் அழிய வேண்டும் என்பதுதான்!

அமைச்சர் பெருமான் அருளும் திருவாக்கை ஏற்றுக்கொண்டு சும்மா இரு!

கடவுளின் நியதியால் அம்மாவின் காலைப்பிடி! எச்சில் இலை பொறுக்கு! முடிந்தால் விழுந்து நக்கு!

— கவரிமான்.

# ஏமாளிகளல்லர் தமிழினத்தார் - இதை 'வானுப் போனு' கூட்டமே அறிந்துகொள்வீர்!

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தச் சபையிலாவது கம்யூனிஸ்டுகள், அரசியல் சட்டத்தில் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை வழங்கவேண்டும் என்று அடித்துப் பேசியிருக்கிருர்களா என்ருல் அதுவும் கிடையாது!

மாருக — தமிழ் மக்களின் மொழி மற்றும் அடிப்படை உரிமைகளை புதிய அரசியல் சட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென வலியுறுத்தி — அரசியல் நிர்ணய சபையில் அடிப்படைத் தீர்மானங்களுக்கு தமிழரசுக் கட்சியினர் கொண்டுவந்த திருத்தங்கள் அனைத்தையும், அரசாங்கத்துடன் சேர்ந்து எதிர்த்து வாக்களித்து முறியடித்தவர்கள் இந்தக் கம்யூனிஸ்டுகள்! தமிழினத்தின் மரண சாசனமான புதிய அரசியல் சாசனத்தை உருவாக்கியதில் முக்கிய பங்கு ஏற்றவர்கள் இந்தக் கம்யூனிஸ்டுகள்!

தமிழ் மொழிக்கு உரிமைகள் வழங்கப்படுவதை எதிர்த்த சிங்கள இன வெறியன் இரத்தின சாராவுக்கு நினைவுச் சிலையெழுப்பி, அந்தத் தமிழ்ப் பகைவனை தேசியத் தலைவன் என்று போற்றிப் புகழ்ந்து பாடியவர்கள் இந்தக் கம்யூனிஸ்டுகள்!

இப்படி அமைச்சரவை மட்டத்தில் — அரசாங்கப் பாராளுமன்றக் குழுவில் — தேசிய பேரவையில் — அதற்கு முந்திய நாடாளுமன்றத்தில் — அரசியல் நிர்ணய சபையில் — தமிழுக்காக — தமிழுரிமைக்காக ஒரு நாள்கூட வாதாடாதவர்கள் — தமிழுக்கும் தமிழர்களுக்கும் உரிமை கோரும் தீர்மானங்களையெல்லாம் ஆட்சியிலுள்ள சிங்கள வெறியர்களுடன் சேர்ந்து எதிர்த்து வாக்களித்த தமிழ்த் துரோகிகள்—இப்போது தமிழர்களுக்காக தமிழர்கள் மத்தியில் மாய்மாலக்கண்ணீர் வடிக்கிருர்கள் என்ருல் தமிழினம் அதை நம்புமா?

இப்போது மட்டும் என்ன? தமிழர்களின் அடிப்படை உரிமைகள் வழங்கப்பட வேண்டுமென கம்யூனிஸ்டுகள் தமிழர்களிடம் வந்து "கோரஸ்" பாடத் தேவையில்லையே! முடியுமானுல் தான் அங்கம் வகிக்கும் அரசாங்கத்தைக் கொண்டு, தமிழுக்கும் தமிழினத்தின் ஏனைய அடிப்படை உரிமைகளுக்கும் பாதுகாப்பளிக்கும் வகையில், புதிய அரசியல் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரட்டும்! திராணியிருந்தால், அந்தரங்க சுத்தியிருந்தால், அதைச் செய்யுங்கள்! தமிழ் மக்களை ஏமாற்றலாமென்று கனவு காணுதீர்கள்!

கம்யூனிஸ்டுகள் எப்போதுமே தாங்கள் விடும் தவறுகளை பத்து ஆண்டுகள் கழித்தே உணரக்கூடிய 'வல்லமை' உள்ளவர்கள். இதோ, 1961ம் 1966ம் ஆண்டுகளில் அவர்கள் விட்ட தவறுக்காக இப்போது வருந்துவதைப் பாருங்கள்!

"......ஆனுல் இக்கால கூட்டத்தில் எமது பிரதேசக்கிளை விட்ட தவறுகளை விமர்சிக்கும் கடமை எங்களுடையதே. இப்பிழைகள் பின்வருமாறு.

"தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள முடியா தவற்றை அவர்கள் மத்தியில் திணிக்க முயற்சித்தமை. 1961—ம் ஆண்டு தமிழரசுக்கட்சி

## அரசியல் மடல்

கச்சேரிக்கு முன்பு சத்தியாக்கிரகம் செய்த பொழுது, எமது கட்சி சில துண்டுப் பிரசுரங்கள் விநியோகித்ததன் மூலம், மொழிப் பிரச்சினையைச் சத்தியாக்கிரகப் போராட்ட மூலமாக அன்றி பேச்சுவார்த்தை மூலமாகவே தீர்க்கப்பட வேண்டுமென்று சுட்டிக் காட்டினேம். இது சரியாக இருந்த பொழுதிலும் அரசாங்கத்தைத் தமிழ்மொழி விசேட மசோதாவை அமுல் நடத்தும் படி வேண்டிய விதிகளைத் தயாரிக்கத் தவறியதைக் கண்டிக்கத் தவறிவிட்டோம். அதேபோல் பொலிஸ் இராணுவத்தின் அத்துமீறிய அட்டூழியங்களைக் கூடக் கண்டிக்கத் தவறிவிட்டோம்.

"1966—ம் ஆண்டு தைமாதம் 8-ம் திகதி கொழும்பில் ஏற்பட்ட சம்பவங்களைப் பற்றி எமது பிரதேசக் கமிட்டி எடுத்த முடிவுகளும் அதே வருடம் மே தினக் கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானங்களும், இதே காலங்களில் கட்சிப் பத்திரிகைகளில் வெளிவந்த கட்டுரைகளும் தமிழ் மக்கள் மத்தியில் எமது கட்சி மீது வெறுப்பேற்படுத்தக் கூடிய சம்பவங்களேயாகும். இத்தவறுகளைத் திருத்தாமலும் பொது மக்கள் மத்தியில் அடிப்படையான வேலைகளைச் செய்யாமலும் பொது மக்களின் ஆதரவைத் திரட்டும் முயற்சியில் பல சந்தர்ப்பவாதக் கருத்துக்கள் மூலம் உடன் படிக்கைகளை ஏற்படுத்த முயற்சித்தோம்."

— கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ்மாவட்ட அங்கத்தவர்களின் மாநாடு வெளியிட்ட இரகசிய அறிக்கை (ஆவணி 4. 5. — 1971)

இப்படி தமது சந்தர்ப்பவாதக் கொள்கையை — தாம் சந்தர்ப்பவாதிகள் என்பதை ஒப்புக்கொண்டிருக்கும் கம்யூனிஸ்டுகள் தாம் இப்போது மீண்டும் தாங்கள் விடும் தவறைப் புரிந்துகொள்ளாமல், தமிழ் தேசிய இனத்தின் எழுச்சியை பகைக்க முனைகிருர்கள்! புதிய சிங்கள பௌத்த அரசியல் திட்டத்தை — தமிழ் மக்கள் வெறுத்தொதுக்கும் திட்டத்தை — தமிழ் மக்கள் மீது திணிக்க முயலுகிருர்கள்!

தமிழ் தேசிய எழுச்சியை — விடுதலை உணர்வை — புரிந்துகொள்ளாமல் காங்கேசன்துறை இடைத்தேர்தலில் காலூன்ற கம்யூனிஸ்டுகள் முயல்வார்களாயின், அவர்கள் என்றுமே மீண்டும் எழ முடியாத மரண அடியை தமிழினம், தனது வாக்குச் சீட்டுக்களினுல் தந்து வைக்கப்போவது மட்டும் உறுதி.

உன் அன்புத்தோழன்

கோவை மகேசன்



# 3-வது 'காதல் காவிய' வாரம்!

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் லிடோ (யாழ்ப்பாணம்)

ஷாஜகான் கட்டிய தாஜ்மகால் உலகின் அதிசயங்களின் ஒன்று! ஆனந்த் கட்டிய மாளிகை திரையுலகில் ஓர் புதுமை!!

நடிகர் திலகம் சிவாஜிகணேசன், வாணிஸ்ரீ பாலாஜி, சாந்தகுமாரி நாகேஷ், பண்டரிபாய், பத்மினி, சுந்தரராஜன், ரமாபிரபா, புஷ்பலதா ஸ்ரீகாந், சுகுமாரி, ரங்கராவ், கவிதா, C. K. சரஸ்வதி —நடித்த—

விஜயா சுரேஸ் கம்பைன்ஸ்

## வசந்த மாளிகை (ஈஸ்ட்மென் கலர்)

தயாரிப்பு: D. ராமாநாயுடு, ஒளிப்பதிவு: A. வின்சென்ட், டைரக்ஷன்: K. S. பிரகாஷ்ராவ்.

---

கிங்ஸ்லி (கொழும்பு) 4வது வெற்றி முரசு வாரம்

ஜெய்சங்கர், லட்சுமி (இரட்டை வேடம்) C. I. D. சகுந்தலா நடித்த—

## கருந்தேள்கண்ணாயிரம்

---

4வது வெற்றி மாதம் வெள்ளி விழா சித்திரம்

சென்ட்ரல் (மருதானை) ஜோதி (திருமலை) ராணி (யாழ்ப்பாணம்)

- சிவாஜி கணேசன்
- ஜெயலலிதா
- மனோரமா
- எம். ஆர். ஆர். வாசு
- வீ. கே. ராமசாமி, சுபா நடித்த



## பட்டிக்காடா பட்டணமா

டைரக்ஷன்: பி. மாதவன் பாடல்கள்: கண்ணதாசன் இசை: எம். எஸ். விஸ்வநாதன்.

---

3வது வெற்றி வாரம்! ஸ்ரீதரின் சிரி, சிரி, எனச் சிரிக்கவைக்கும் முழுநீள ஈஸ்ட்மன் வண்ண ஹாஷ்ய சித்திரம்

சித்திராலயாவின்



## செல்லமகால் இம்பீரியல் (மட்டுநகர்) வின்சர் (யாழ்நகர்)

ரவிச்சந்திரன் - காஞ்சனா, நாகேஷ் ரமாபிரபா, மூர்த்தி மாலி விஜயசந்திரிகா நடித்த—

## உத்தரவின்றி உள்ளே வா

கெயிட்டி – 9வது வாரம்

## இருளும் ஒளியும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை 194 ஏ. இலக்கத்தில் 1973ம் வருடம் ஜனவரி மாதம் 28ம் திகதி ஞாயிற்றுக் கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.